# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம்"

—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலே 3 | ஞாயிறு 24-3-40 பிரமாதிஹு பங்குனிமீ 11உ | முத்து 20 |
|---|---|---|


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| காங்கிரஸின் வெற்றி | ... ... ... ... | 534 |
| உலக வர்த்தமானம் | ... ... ... ... | 536 |
| இது தெரியுமா? | ... ... ... ... | 537 |
| அதிகப் பிரஸங்கம் | ... ... ... ... | 538 |
| ஆரோக்கியமும் சத்துள்ள உணவும் | ... டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி | 541 |
| அறுபத்துமூவர் உற்சவம் | ... ... "கிருஷ்ண குமாரி" | 546 |
| மளிகைக்கடை மாணிக்கஞ் செட்டி | ... ஜி. பாலசுப்ரமண்யம் | 548 |
| சிறுவர் பகுதி | ... ... ... சக்கரவர்த்தி | 552 |
| சினிமா வானில் | ... ... ... ... | 555 |



"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# காங்கிரஸின் வெற்றி

உலகில் வழக்கம்போல் ஒன்றும் ஒரு வருஷமாய் நடக்கவில்லை. இவ்வித நவீனங்கள், புத்துயிர் பிறப்பிற்கு அறிகுறிகள் ஆகும். இவைகளே சாக்ஷி.

வழக்கம்போல் ராம்கார் காங்கிரஸ் சொற்பொழிவு வெள்ளத்தில் கூடவில்லை. உண்மையான வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டது. இதுவும் வருங் காலத்திற்கு ஒரு அறிகுறியாகும். புயற்காற்றிலும், மழையிலும், வெள்ளத்திலும், இடி முழக்கத்திலும், மின்னல் ஒளியிலும், பிறக்கும் காங்கிரஸின் பிறப்பு புத்துயிர் பிறப்பு என்பதில் ஐயமில்லை.

பல காரணங்களைக் கொண்டு ராம்காரில் இந்த வாரம் கூடி நடைபெறும் காங்கிரஸ், நமது சரித்திரத்தில் என்றும் மறக்கக் கூடாத வெற்றியை அடையப் போகிறது. இந்த வருஷத்திய ராஷ்டிரபதி மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் சரித்திரத்தையும், உத்தமமான குணங்களையும் அறிந்தவர்களுக்கு இந்த நம்பிக்கை பூர்ணமாக உண்டு. தவிர, மகாத்மா காந்தியும் விலகி நிற்காமல், காங்கிரஸ் செயலில் கலந்துகொண்டு தலைமை வகிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்தச் சேர்க்கையில் பக்தியுடன் நாம் ஒரு வருஷம் விடாத் தொண்டு செய்தால் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை உண்மையில் பிறக்கும் என்பதில் ஐயமேயில்லை. இந்த ஒற்றுமை ஏற்பட்டுவிட்டால் இந்தியாவுக்குப் பரிபூரண சுயராஜ்யம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

உலகம் முழுவதும் பரவி நிற்கும் புது உணர்ச்சியையும், புத்துயிர் வாழ்வையும், இந்தியாவுக்கு ஊட்ட வேண்டுமென்கிற அவர் ராஷ்டிரபதியின் பிரசங்கத்தில் நிறைந்திருக்கிறது. ஆஸாதின் உத்தமப் பிறப்பின் உயர்தரக் குணங்களும், சாந்தமும், ஐக்கியபாவமும், மேல் வந்து தேங்கி நிற்கின்றன. இதை இந்த வருஷத்தில் செயல்ரூபமாக நாம் ஒவ்வொரு கிராமத்திலும் தொண்டு செய்து உபயோகப்படுத்திக் கொள்ளாவிட்டால், அது நம்முடைய தவறே.

உலகில் கையாண்டுவரும் அரசியல் முறையே பலவித கஷ்ட நிஷ்டுரங்களுக்கும் மூலகாரணமாக இருக்கிறது. அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் மேல் நாட்டு நாகரிகத்திலும் ஐரோப்பிய ஜனநாயக முறையிலும் நமக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வெள்ளையர்கள், கறுப்பு மனிதர்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஒரே எண்ணம் அடைந்தவர்களாய்த் தோன்றுகிறார்கள். நம்மை அடிமைப்படுத்தி எப்படி தங்கள் சுயலாபத்திற்கு ஆண்டு அனுபவிப்பது, என்பதுதான் அவர்கள் முக்கிய நோக்கம் போலிருக்கிறது.

ஐரோப்பா சம்பந்தப்பட்ட வரையி லும், ஆப்பிரிக்காவையும் ஆசியா வையும் அடிமைப் பண்ணை சொத் தாக இன்னும் பாவித்து வருகிறார் கள். ஏற்பட்ட பல பாக பத்திரங் களில் அப்படியே பிரித்துக் கொண்டுவிட்டார்கள்.

இந்த பாக பத்திரத்தில் தனக்கு பாகம் கிடைக்கவில்லையே என்பது தான் ஜெர்மனியின் துக்கம்; கோபம்; யுத்தத்துக்குக் காரணம். வேட்டகம் போய் தூங்கிப் போன இளைய காளை இப்பொழுது உதைத்து முட்டி சண்டையைக் கிளப்பி விட்டிருக்கிறது. இதுதான் யுத்தத்தின் ஆணி வேர். ஐரோப் பிய தேசங்கள் நாம் சம்பந்தப் பட்ட வரையில் இந்த மனப் பான்மையோடு இருக்கும் வரையில், உலகத்தில் சமாதானம் உலவ நிழலேது; இடமேது. இந்த பாவம் மாறினால்தான் சமாதானத்திற்கும், சம்னர் வெல்ஸ் சுற்றுப் பிரயாணத் திற்கும் இடம் கிடைக்கும். இதை அறிவார் யார்? உலக அரசியலில் பேய் பிசாசு அல்லவோ குடி கொண்டிருக்கிறது? சேம்பர்லேனும் சர்ச்சிலும் தலைமை வகித்து வரும் பிரிட்டிஷ் மந்திரி சபையில் நமக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

உண்மையில் இந்தியாவுக்கு சுயேச்சை கொடுக்க எண்ணம் இருந்தால் யுத்தம் ஆரம்பிக்கு முன் நம்மை ஒரு வார்த்தை கலந்து கொண்டிருக்க மாட்டார்களா? இந்த சுயேச்சை எண்ணத்தைக் காரி யத்தில் அமுலுக்குக் கொண்டு வர எவ்வளவு நாழி ஆகும்? மனத்தில் ஒற்றுமை இருந்து விட்டால் தஸ் தாவேஜு பின்னர் எழுதிக் கொள்ளலாமே. அனுபவத்தை விட்டுக் கொடுத்தல்தானே, உண்மை எண்ணத்திற்கு அடை யாளம். இந்தியாவின் அனுசரணை யும், ஒத்துழைப்பும், இல்லாமல், அழியாத வெற்றியும் உலக சமா தானமும் அடைய முடியுமா?

புயற்காற்றிலும் வெள்ளத்திலும் அஞ்சாமல் நிறைவேற்றின தீர் மானத்தை, காங்கிரஸ், விடா முயற்சியுடன் மாகாணத்துக்கு மாகாணம், கிராமத்திற்கு கிராமம் அந்தந்த தலைவர்களைக் கொண்டு செயல் ரூபமாக அஹிம்ஸா முறை யிலே வழி தப்பாமல் நிறைவேற்ற வேண்டும். ராஷ்டிரபதி மௌலானா அபுல் கலாம் ஆஸாதின் அக்கிராஸ னத்திலும், மகாத்மாவின் அஞ்சாத தலைமையிலும், சுயராஜ்ய அஹிம் ஸாப் போரில் நமது தேசம் வெற்றி யடையும் என்பதில் ஐயமில்லை. இந்த வழியைத் தொடர்ந்து, அப் படியே உலகம் முழுவதும் பேரா சையை ஒழித்து, வெற்றியடைந்து, எல்லா தேசங்களும் அரசியலில் ஒன்று கூடி, ஆயுதப் பரிஹாரணம் செய்து, சமாதானமாய் வாழும் என்று நம்புகிறோம்.

இந்தப் பெரும் பயனளிக்க வேண்டிய தபசும், தியாகமும், நமது நாட்டில், மலைச்சாரலில் ஊறி ஓடும் வெள்ளம்போல் வேண்டிய அளவு ஈசனளித்திருக்கிறாரென்று சொல் லுவது மிகையாகாது.

கே. எஸ். வேங்கடரமணி

---

# உலக வர்த்தமானம்

சென்ற வாரம் பின்லாந்து யுத்தத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்டது. மூன்று மாதக் கடும் போரின் முடிவில் பின்லாந்து சில பூபாகங்களை ரஷ்யாவுக்குத் தத்தம் செய்யவேண்டிதான் வந்தது. பின்லாந்தில் லடோகா ஏரிப் பிரதேசத்தில் சில பாகங்களும், வியபுரிக் கருகாமையிலுள்ள சில பாகங்களும் பின்லாந்தின் கையைவிட்டு நழுவிவிட்டன. சமரஸ ஒப்பந்தமும் ரஷ்ய ஸோவியத் சட்ட சபையில் ஆமோதிக்கப்பட்டது.

“பின்லாந்து சண்டையில் தோல்வியடைய உடந்தையாயிருந்தது ஹிட்லர்தான்” என்று ஹிட்லர்மேல் குற்றம் சாட்டுகிறார் சேம்பர்லின். பிரிட்டன் மார்ச்சு மாதத்தில் பின்லந்துக்கு உதவி புரியவேண்டும் என்று தீர்மானித்தது. ஆனால் ஜெர்மனியின் துர்மார்கப் போக்கால்தான், பிரிட்டன் பின்லாந்தைக் காப்பாற்றாமல் போய்விட்டது, என்று விளக்கிக் கூறுகிறார்.

ஹிட்லரும் முஸோலினியும் கூடிக் கலந்து பேசினார்களாம். வெகு சந்தோஷமாகத்தான் சம்பாஷித்தார்களாம். அவர்கள் சம்பாஷணை ஜெர்மனி, இத்தாலியைப் பற்றிமாத்திரம் அல்ல; உலக அரசியல் நிலையைப் பற்றியும்தான் என்று ஒரு செய்தி கூறுகிறது.

ஹிட்லர்முஸோலினி சம்பாஷணை ஐரோப்பாவில் பிரிட்டிஷ் செல்வாக்கு பரவாமல் தடுக்க எடுத்துக்கொள்ளப் போகிற முயற்சியாகும் என்று சில ராஜ தந்திரிகள் ஊகிக்கிறார்கள். பால்கன் பிரதேசத்தில், ரஷ்யா—ஜெர்மனி—இத்தாலி செல்வாக்கை நிலைநாட்டுவதுதான் இப்பொழுது சர்வாதிகாரிகளின் நோக்கம் என்பதாக ஏற்படுகிறது.

பிரெஞ்சு மந்திரி சபை ராஜிநாமா செய்தது. இதற்குக் காரணம் ஹிட்லர் விடுத்திருப்பதாயுள்ள சமரஸ நிபந்தனைகள்தான் என்று தெரிகிறது.

இந்தியாவின் சரித்திரத்தில் ஓர் முக்கிய ஸ்தானம் பெறக்கூடிய நிகழ்ச்சியையுடைய வாரம் இது. ராம்காரில் மகத்தான காங்கிரஸ் கூட்டம்.

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் தன் தலைமை உரையில், இந்தியாவின் சுயேச்சைப்போரை ஆதியோடந்தமாக எடுத்துரைத்தார். “இதுவரையில் காங்கிரஸ் முன்னேற்றமடைந்து வருகிறதே தவிர, பின்னடையவில்லை. காங்கிரஸ் முன் வைத்த காலை பின் வைக்காது. அதனால் தான் சட்ட மறுப்பு இயக்கம் போன்ற வழிகளைக் காங்கிரஸ் கையாளுவதற்கு முன் மிகுந்த யோசனை செய்கிறது” என்று எடுத்துக் காட்டினார். பிரிட்டிஷ் சர்க்காரின் கேள்வி முறையற்ற போக்கைக் கண்டித்தார். வைஸ்ராய் அறிக்கையிலும் ஜெட்லண்ட் அறிக்கைகளிலும் ஒரு விதமான ரஸமும் இல்லை என்று தெரிவித்தார். நமது தேசத்தின் ஒற்றுமைக்கு பிரிட்டிஷார் பாடுபடுவது ஆஷாடபூதி வேலைதான். தேசத்தின் ஒற்றுமையை உண்டாக்குகிறேன் என்று சொல்லிக் கொண்டே வேற்றுமையைத்தான் பிரிட்டிஷார் உண்டாக்குகிறார்கள் என்றுரைத்தார். இதுபோன்ற கொள்கையைப் பிரிட்டிஷார் மாற்றிக்கொள்ள வேண்டியதற்குக் காலம் வந்து விட்டது என்று கூறினார்.

பலத்த மழையிலும் வெள்ளத்திலும் கூட்டம் கூடி முடிந்தது. பாட்னா தீர்மானங்கள் எல்லாம் அதிக மெஜாரிட்டியில் நிறைவேறின.

காந்திஜி, தன் தலைமை ஜனங்களுக்கு வேண்டியதாக இருந்தால், தன் சொல் கேட்டு நடக்க வேண்டும் என்று சொல்லி ஓர் புதிய பலத்துடன் தன் சேனையை யுத்தத்துக்குத் தயார் செய்கிறார்.

# இது தெரியுமா?

## தேனீ வளர்த்தல்

நமது தேசத்தில் தேனீ வளர்க்கும் தொழிலை விருத்தி செய்ய அதிக செலவில் பல திட்டங்களை அனுசரிக்க, இம்பீரியல் அக்ரிகல்சரல் ரிஸேர்ச் சபையார் ஆலோசித்து வருகிறார்கள். சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம்,. அஸ்ஸாம் மாகாணங்களிலிருந்து பல திட்டங்கள் இந்திய சர்க்காருக்கு வந்திருக்கின்றன. இம்பீரியல் விவசாய ஆராய்ச்சிச் சபை, தன் ஆதரவின் பேரிலேயே ஒரு மத்திய தேனீ வளர்க்கும் சபை ஒன்று ஸ்தாபிக்க வேண்டும் என்று அபிப்ராயப்படுகிறது. இதற்கு முதற் காரியம் செய்ய வேண்டியது என்னவென்றால், தகுந்த யோக்யதையுள்ள ஒருவரை விசேஷ பயிற்சிக்கு வெளி தேசங்களுக்கு அனுப்புவது. ஒரு வருஷம் அந்த உத்தியோகஸ்தர் வெளி நாட்டில் பயிற்சி அடைவதற்கும், ஒரு வருஷம் ஆரம்ப ஆராய்ச்சிக்கும், மூன்று வருஷ வேலைக்கும் ரூ. 50,000 செலவு மதிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த இடத்தில் இந்த மத்திய சபை வேலை செய்யும் என்பது இனி மேல்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரால் நிர்ணயிக்கப்படும்.

இந்த மத்திய ஸ்தாபனத்துடன் வேலை செய்ய இந்தியாவின் சில பாகங்களில் உப ஸ்தாபனங்களும் ஏற்படுத்த வேண்டும். இதற்கு மதிப்பிடப்பட்ட செலவு ஒவ்வொரு ஸ்தாபனத்துக்கும் ரூ. 12,000. சென்னை சர்க்கார் இத்தொழிலில் மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு வெகு காலமாக வேலை செய்து வருகிறபடியால், சென்னை மாகாணத்திலுள்ள வேனுட் என்னும் இடத்தில் உப ஸ்தாபனம் சீக்கிரமே திறந்து வைக்கப்படும்.

## உல்லா புல்

டெஹ்ராடூன்னில் நடத்தப்பட்ட கவர்ன்மெண்ட் ஆராய்ச்சியிலிருந்து, ஒரு வகையான காட்டுப் பொருளினின்றும், மிகக் குறைந்த செலவில் அட்டைக்கு உபயோகப்படும் அரக்குக் கலர் காகிதங்கள் தயார் செய்ய வசதி இருக்கிறது என்று தெரிகிறது. இந்த தொழில் புதிதாக இருந்தாலும், மிகவும் லாபகரமாக இருக்குமாம். இப்பொழுது சாதாரணமாக 20,000 டன் பேபர், ஐக்கிய மாகாணம், பஞ்ஜாப், பிஹார், மத்திய மாகாணம், மத்திய இந்தியா முதலிய இடங்களில் செலவாகின்றன. தொழில் விருத்தியடைந்தால் இந்த பேப்பருக்கு தேவை இன்னும் அதிகரிக்கலாம். ஐக்கிய மாகாணத்திலுள்ள ஒரு வகை உல்லா புல்லை, காகிதம் உற்பத்திக்கு உபயோகிக்கலாம் என்பது ஆராய்ச்சியிலிருந்து விளங்குகிறது. எனவே இந்த தொழில் சீக்கிரத்திலேயே ஆரம்பிக்கப்படுமாம். 48,000 டன் உல்லா காகிதத்திலிருந்து 19,000 டன் அட்டைக் காகிதம் உற்பத்தி செய்யக்கூடுமாம். ஐக்கிய மாகாணத்திலுள்ள இந்த உல்லா புல்லை, விலை கொடுத்து வாங்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

## மைசூர் இரும்புத் தொழில்

மைசூர், ஆச்சரியப் படத்தக்க தொழில் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. மைசூர் இரும்புத் தொழிற்சாலை, தங்களுக்கு வேண்டிய இயந்திர பாகங்களையும், மைசூர் பேப்பர் மில்களுக்கு வேண்டிய இயந்திர பாகங்களையும், தயார் செய்கிறது. இது போன்ற தொழில் மைசூர் எலக்ட்ரிக் தொழிற் சாலையிலும் செய்யப்பட்டு வருகிறது. மைசூர் ஸமஸ்தான ரயில்வே இலாகா, தனக்குவேண்டிய சில இரும்புச் சாமான்களை, சப்ளை செய்யும்படி மைசூர் இரும்புத் தொழிற்சாலையைக் கேட்டுக் கொண்டது. எல்லா இரும்பு வார்ப்பட சாமான்களும் பத்ராவதியில் தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஏதோ சில சாமான்கள்தான் வெளியிலிருந்து வரவழைத்துக் கொள்ளுகிறது மைசூர், எல்லாவற்றையும் தானே உற்பத்தி செய்து கொள்ளுகிறது.

# அதிகப் பிரஸங்கம்

[நமது அதிகப் பிரஸங்கி முதலில் தனக்குவந்த கடிதத்தைச் சொல்லிவிட்டு பிறகு தன் பிரஸங்கத்தை ஆரம்பித்துக் கொள்ளுகிறார்.]

## "குறுக்கு மூளைக்குக் கிறுக்குப் பதில்"

ஐயா, குறுக்கு மூளையாரே! திருமேனி யாரோ? திருமேனித் தன் குறுக்கு மூளையை எப்பொழுது, எங்கே, எதனால் கிறுக்கிக்கொண்டதோ? "பூனை நரம்புகளை" வெளியிட்டபொழுது திருமேனியின் திருப்பூனைத் திங்குரலால், ரம்பம் அறுப்பதுபோன்ற விமர்சனம் ஒன்றை காண்பேன் என்று நான் கனவிலும் கருதவில்லை. என் இனத்தைச் சேர்ந்த சாதாரணக் கவிகளை, உதவாக்கரை விருதாரிஷபங்களாகவும், விமர்சகர்களை, கர்வத்தினால் பூரித்து, புத்தக ஸம்ஹாரிகளாகவோ (கரையான் அல்ல) அல்லது புஸ்தகம் தூக்கிகளாகவோ விளங்கி, பேச்சிலும் செய்கையிலும் க்ராம்யராக இருந்துகொண்டு, ஆங்கில இலக்கியத்தின் ஆங்கிலப் பகுதியைத் திருத்தவேண்டிய வ்யாஸமாகக்கொண்ட (indo-anglian) உபாத்தியாயர்களாகவும் மதித்து அவர்களை கைவிட்டுவிட்டேன். குயிலுக்கும் காக்கைக்கும் உள்ள வித்யாஸம் தெரியாமலும், மஞ்சள் அல்லியையும் கனகாம்பரத்தையும் ஒன்றெனவும் எண்ணும் இவர்கள், கீட்ஸ் எழுதிய ஓடு டு நைட்டிங்கேலையும், வோட்ஸ் வோர்த் எழுதிய டபோடில்ஸையும் சரியாக மதித்து, ரஸிப்பதுபோல் பாவனை செய்வார்கள் இவர்கள்.

ஸ்வதேசிகளான இவர்கள் செய்ய வேண்டியதை அன்ய நாட்டார் நமக்குச் செய்கிறார்கள். கவி தாகூரை ஐரோப்பாவிற்கு—என் இந்தியாவிற்கும்கூட—அதிமுகப்படுத்தியவர் யீட்ஸ் தோருதத்தைக் கண்டுபிடித்தவர் கோஸ்ஸி. ஸரோஜினி தேவியின் காவ்ய செவிலித்தாய் ஆர்தர் ஸிமான்ஸ். மனமோஹனகோஷை ரஸித்தவர் லாரேன்ஸ் பின்யன் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயாவை இந்தியாவிற்குப் பரிசளித்தவர் டாக்டர் கஸின்ஸ். பாரத மணி ஆசிரியரைப்பற்றி ஆங்கிலப் பத்திரிகைகளில்—சென்னையில் அல்ல, இங்கிலாந்தில். லார்ட் ஹால்டேன், டி.ஏ. ஸ்பெண்டர், கன்னிங் ஹாம் க்ராஹாம் முதலியோர் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். இதுபோலவே, ஐந்து வருஷங்களுக்குமுன் என் காவ்ய புத்தகமொன்றை ப்ரசுரிக்க முன் வந்தது ஆக்ஸ்போர்டில் உள்ள உயர்தர ப்ரசுராலயம்தான். இது இவ்விதம் இருக்க, திடீரென்று நீர் எங்கிருந்தோ குதித்து, மங்கோலியன் நாசி போல் சமமாயும், மலைவேம்புபோல் கோராயும் யதார்த்தத்தைப் பேசி இந்த இந்தோ ஆங்க்லியன்களின் மன த்ருப்தியையும் மனக்கோட்டையையும் தகர்த்துவிட்டீர். இது ஒரு வேடிக்கைதானே!

ஆனால் அந்தரத்தில் தொங்கும் திரிசங்கு ஸ்வர்க்கத்தில் என்னை ஸ்தாபிக்க, நீராயிருந்தாலும் சரி உம் பாட்டனாராக இருந்தாலும் சரி, நான் கண்டிப்பாய் ஒப்பமாட்டேன். நான் பால்யன்தான். குட்டிச்சுவரில்லை. தலையில் சிறு கூறையிருப்பதால் மகுடம் வழுக்கி விழுந்துவிடாது. தைரியமிருந்தால் "பூனை நரம்பு ஸ்வர்க்கம்" ஸ்ருஷ்டிசெய்து அதில் என்னை ஏக சக்ராதிபதியாய் மகுடாபிஷேகம் செய்தால், நான் என் சிற்றரசர்களை அதில் வரவேற்று, பூனை நரம்பு சங்கீத கானத்தில் யுகாந்திரங்கள் ராஜ்ய பாலனம் செய்வேன். இடி முழக்கத்துடனும், நீர் வீழ்ச்சியின் ஆழ்ந்த த்வனியுடனும், இலைகளின் சலசலப்புடனும், நாணல்களின் முணமுணப்புடனும், எதிரொலிகள் ஒலிக்க ஏற்றதாய், ராஜஸபையை என் ஸ்வர்க்கத்தில் குற்றங்குறையின்றி, த்வனி சாஸ்திரப்படி நிர்

மாணம் செய்யும். இவ்விதம் செய்ய உமக்குத் தைரியம் உண்டா?

"பூனை நரம்புகளின் ஜனகன்"

---

## "காவேரிப்பூம் பட்டினமாம்"

நாலைந்து நாளாய்ப் பாரதமணி ஆசிரியரைப் பேட்டி காணாமல் இருந்துவிட்டேன். போனால் கோபித்துக்கொள்வார். போகாவிட்டாலும் சும்மா விடப்போகிறதில்லை. வேறு விதியில்லாமல் தெய்வத்தின் மீது பாரத்தைச் சுமத்தி, கடற்கரைக்குச்சென்று ஒரு படி மணலைக் காகிதத்தில் பொட்டலமாகக் கட்டி ஆசிரியரைக் காணக் காரியாலயம் சென்றேன். முதலில் தலையை மெதுவாக நெருப்புக்கோழிபோல் நீட்டி உள்ளே பார்த்தேன். ஆசிரியர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். மூச்சு விடாமல் உள்ளே நுழைந்தேன். ஆனால் ஆசிரியரின் பாம்புச் செவியில் நான் மூச்சு விடாமலிருந்தது பட்டது.எழுதுவதை நிறுத்தி, என்னை பாதாதிகேசம் ஒரு முறை, முறைத்துவிட்டு மறுபடியும் எழுத ஆரம்பித்தார்.

தைரியமாய் மேஜை அருகில் சென்று பொட்டலத்தைஅதன்மேல்வைத்தேன். கவனித்தார் ஆசிரியர். பேனா நின்றது. எடுத்தார் பொட்டலத்தை. பிரித்தார் மடிப்பை. கண்டார் மணலை. கொண்டார் ஆனந்தம். "அடே அதிகப் பிரஸங்கி; பெரியவர்களைக் காண மணல் கொண்டு செல்லும் வழக்கம் அதிகப் பிரஸங்க புராணத்தில் எந்த இடத்தில் இருக்கிறது என்று கேட்டார். தயக்கத்துடன் ஒன்றுமில்லை. இன்றுதான் காவேரிப் பூம்பட்டினத்திலிருந்து திரும்பினேன். வெறுங்கையுடன் வரவேண்டாமென்று கொஞ்சம் மணல் எடுத்துக்கொண்டு வந்தேன். காவேரிப்பூம்பட்டின...." என்று முடிப்பதற்குள், "ஹா! காவேரிப்பூம் பட்டின மணலா இது"என்று கூக்குரல் இட்டார். முகத்தில் ஆனந்தம் பொங்கியது கண்கள் ப்ரகாசித்தன. முதுகு நிமிர்ந்தது." ஆஹா! மண்ணாவதும் காவேரிப் பூம்பட்டின மண்ணே! என்ன சிறப்பு! என்ன வளர்ச்சி! என்ன் குளிர்ச்சி!" என்றார். திடீரென்று என்னைநோக்கி, "அடே அதிகப் பிரஸங்கி! காவேரிப்பூம் பட்டினத்தின் பெருமை தெரியுமா?" என்றார். நான் இல்லை என்று தலையை அசைத்து, அதை ஆயிரத்து முப்பத்தேழாம் தடவை கேட்கத் தயாரானேன்.

"நீதி தவறாத பட்டினம். மதியும் நிதியும் நிறைந்த பட்டினம். மாதம் மும்மாரி பொழிந்த பட்டினம். சீரும் சிறப்பும் பொங்கி வழிந்த பட்டினம். புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் கடலில் கப்பல்கள்சென்ற பட்டினம். ஏழை உழவன் கொட்டிலில் யானைகள் பதினேழாவது கட்டப்பட்டிருக்கும் பட்டினம். மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த சாலைகள்". அடடா! சாலைகளை எவ்வளவு அழகாய் வர்ணித்திருக்கிறான் வம்ப கவி தெரியுமா? இதோ சொல்கிறேன் கேள். "திண்ணைதனில் அமர்ந்தே பெண்மக்கள் தினமும் புடைத்தனர் நல்முத்தை, பிரித்தெடுத்தனர் பெருமுத்தை. தெரு மண்தனில் சிறு முத்தைச் சிதற விடுத்தே சென்றனர்; விற்கவே கூடை கூடையாய் பருமுத்தை. தண்ணீர் தனில் மூழ்கித் திரும்பும் எண்ணிலா யானைகளின் பாதங்கள், தெரு மண்தனில், சிதறிய முத்தைப்பதிக்க, விண்ணை வரும் உவனம், இல்லை எனும் வண்ணம், தண் மதி நிகர்த்துப் பொலிவுடன் சாலைகள் சொலித்தன காண்!" என்று முடித்தார் ஆசிரியர். (இதை நான் முதலில் சேட்டபொழுது இதை நிஜமென்று நம்பி, மண்வெட்டி ஸஹிதமாய்க் காவேரிப் பூம்பட்டினம் சென்று சாலைகளைத் தோண்டிப் பார்த்து மருந்துக்குக்கூட முத்து அகப்படாமல் ஏமாந்து திரும்பினேன்.)

"ஆமாம்! அடாடா!" என்று நான் ஆசிரியருக்குப் பக்கமேளம் வாசித்தேன். ஆசிரியர் சந்தோஷத்துடன் என்னை நோக்கி "உன் அடுத்த அதிகப்

பிரஸங்கம் எங்கே?" என்றார். இன்னும் இடம் நிச்சயம் செய்யவில்லை என்றேன். "அடேய் உன் அதிகப் பிரஸங்கத்தை என்னிடமேயா காட்டுகிறாய், காவேரிப் பூம்பட்டினத்தில்உன் ஜம்பம் செல்லாது. ஞாபகமிருக்கட்டும்" என்றார். "அதென்னமாக முடியும்" என்று நான் கூறப் புன்சிரிப்புடன் ஆசிரியர் "ஈச்வரன் காவ்யங்களுக்கு வியாக்யானம் எழுதிக் கொண்டுவா" என்றார். "பூனை நரம்புக் கவியையா ஈச்வரன்......" என்று ஆரம்பித்த என்னை "அடே" என்று அவர் அதட்டவும், அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, பூனை நரம்பு வேதத்திற்கு ஸாயண பாஷ்யமாக அதிகப்பிரஸங்கம் செய்ய நேர்ந்த என் விதியை நொந்துகொண்டே பேசாமல் வெளியே சென்றேன்.

ஆசிரியர் கோபித்துக்கொண்டால் குழந்தைகூடப் பயப்படாது. ஆனால் நான் குழந்தையல்லவே. பயப்படாமல வேறு என்ன செய்யமுடியும்? இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் தப்பித்துக்கொள்வேன். தப்பிக்கும் வழி ஒன்றே ஒன்றுதான்; அது "காவேரிப் பூம்பட்டினமாம்." ஆசிரியருக்குக் காவேரிப்பூம் பட்டினப் பைத்தியம் அதிகம். அதைக் கிளப்பிவிட்டால், கோபமெல்லாம் பறந்துவிடும். ஆசிரியரிடம், உங்களுக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருந்தால், இவ்வழியை உபயோகியுங்கள். காரியம் கட்டாயம் கைகூடும். ஆனால் இதை எல்லாம் ஆசிரியரிடம் சொல்லிவிடாதீர்கள். சொன்னீர்களோ...ஹும் ஜாக்கிரதை, அவ்வளவு பயமிருக்கட்டும். அதிகப் பிரஸங்கியிடம் உங்கள் ஜம்பம் செல்லாது. ஞாபகமிருக்கட்டும்.

"அதிகப் பிரஸங்கி"

—


படித்தவர்கள் பாமரர்கள்
கிழவர்கள் இளைஞர்கள்
ஆண்கள் பெண்கள்

எல்லோரும்
படித்து ஆனந்திக்கத்தகுந்தது

*

**பாரத மணி**

இனிய வாரப் பத்திரிகை

வருஷ சந்தா { உள் நாடு ரூ. 4
வெளி நாடு ரூ. 6 }

*

இன்றே சந்தாதாரராய்ச்
சேருங்கள்.


**மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டு.**

**O. S. No. 460/1937.**

R. அனந்தாழ்வார் அய்யங்கார்—வாதி
அண்ணாமலைப் பிள்ளை—பிரதிவாதிகள்.

ஷை நம்பர் வாதி வக்கீல் K. சின்னஸ்வாமி அய்யர் தெரிவிக்கிறதாவது:—

இந்த நம்பர் இன்னியார் சொத்துக்களை ஏலம் போடவேணுமாயும், ஏலத்தில் வாதியாவது, வாதி வக்கீலவர்களாவது ஏலம் கேட்கவும் ஏலத்தொகையை டிக்ரித் தொகை செலவில் ஒப்படைத்துக்கொள்ளவும் வாதிக்கு பர்மிஷன் கொடுக்கவேணுமாயும் வாதியால் மனுக்கொடுக்கப்பட்டு 4-ம் பிரதிவாதி கமலக்கோனன் நோட்டீசுகளை அவன் கடைசியாய்க் குடியிருந்த இடமாகிய மன்னார்குடி தாலுக்கா எடயரம்பேத்தியிலுள்ள வீட்டிலும், 10-ம் பிரதிவாதியின் நோட்டீசுகளை ஷையார் குடியிருந்த இடமாகிய மன்னார்குடி கோபப்பிரளயம் எடத்தெருவிலுள்ள வீட்டிலும் ஷை நோட்டீசுகளை இந்தக் கோர்ட்டு வாசலிலும் தனித்தனியே ஒட்டி, சார்வு செய்யவும் பப்ளிகேஷனுக்கும் உத்திரவாகி 30-3-1940ல் ஈயரிங் போடப்பட்டிருப்பதால், ஆக்ஷேபனைகளை அன்று பகல் 10-மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக் கொள்ளலாம் என்பதை இதன் மூலமாய் அறியவேண்டியது.

மன்னார்குடி, }
20-3-'40 }

K. Chinnaswami Iyer,
வாதி வக்கீல்.

# ஆரோக்கியமும் சத்துள்ள உணவும்

[டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி]

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பண்டைக் காலத்துப் பழமொழி உங்கள் எல்லோருக்கும் தெரியும். நல்ல ஆரோக்கியம் என்பது வியாதியில்லாதிருப்பது மட்டுமல்ல. நீண்டகால வாழ்வை விரும்புபவர்களுக்கு ஆரோக்கிய வாழ்வும் திட சரீரமும் வேண்டும். ஆரோக்கியமல்லாமல், நல்ல சரீர அமைப்பு ஏற்படாது. ஆரோக்கிய வாழ்வு இல்லையானால், மனப் பயிற்சி விருத்தியாகாது. நன்றாக வேலை செய்யவும் முடியாது. சதைமட்டும் வளர்ச்சியடைந்த சரீரத்தைக் கண்டு அது திடமான சரீரமாகவும் இருக்க வேண்டுமென்று நினைத்து விட வேண்டாம். நோயற்றதாகவும் திட சரீரமாகவும் இருப்பது அவசியம். ராணுவத்துக்கும், போலீஸுக்கும், இதர சர்வீஸ்களுக்கும், ஆள் சேர்க்கும் காலத்தில் வியாதி இல்லாமல் இருப்பினும் அநேகர் நிராகரிக்கப் படுவதை நாம் பார்க்கிறோம். இதற்குக் காரணம் என்ன? அவர்கள் திட சரீரிகளாயில்லாதிருப்பதே யாகும்.

## ஆரோக்கியத்துக்கும் திட சரீர அமைப்புக்கும் புஷ்டியுள்ள ஆகாரம் அவசியம்

நல்ல சரீரம் அமைவதற்கு ஆகாரத்தில் தக்க புஷ்டியுள்ளதும் சத்துள்ளதுமான வஸ்துக்களின் சேர்க்கை அவசியம். சத்தில்லாத உணவு, சுகத்தைக் கொடுக்காது. புஷ்டியில்லாத உணவுப் பொருள்களால் திட சரீர அமைப்பு அடைவதற்கு முடியாது. நம்முடைய தேசத்தில் ஸ்கூல் பிள்ளைகளின் ஆரோக்கியமும் அவர்களது தேக அமைப்பும் வர வர க்ஷீணமடைந்து வருவதைப் பார்த்துப் பலரும் வருந்துகிறார்கள். மேலும் இந்திய மக்களின் ஆரோக்கிய வாழ்க்கையும் சரீர அமைப்பும் மிகவும் கேவலம். சிசு மரணம், பிரசவ காலத்தில் தாய்மார்களின் மரணம், பல வியாதிகளால் பொது ஜன மரணம் இவைகளின் ஜாப்தா நமது தேசத்தில் மட்டுமே மிகவும் அதிகம். தடுக்கக் கூடிய வியாதிகளாயிருந்தும், அவைகள் தடுக்கப்படாமல் அவைகளால் அகால மரணங்கள் அதிகமாக நேரிடுகின்றன. நம் நாட்டில் க்ஷய நோய் மிகுந்துவிட்டது. நம்தேச மக்களின் வாழ்க்கை (average duration of life) மற்ற தேசமக்களின் காலவரையறைகளுக்கு மிகவும் குறைவாகவே இருக்கிறது. தேசத்தின் வறுமையே இத்தகைய நிலைமைக்கு முக்கியகாரணம். ஏழ்மை நிலை காரணத்தால் மக்களுக்குப் புஷ்டியுள்ள ஆகாரமும் உணவுப் பொருள்களும் கிடைப்பது துர்லபமாகிவிட்டது. சத்துள்ள, புஷ்டியுள்ள உணவுப் பொருள்கள் கிடைக்காததால் பல வியாதிகள் ஏற்பட்டு, கைத்தொழில், பொருள் நிலை, சிக்கன வாழ்வு இவற்றில் நமது தேச மக்கள் மிகவும் கீழான ஸ்திதியில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஆகார அளவு குறைவாலும், ஆகாரத்தின் சக்திக் குணத்தின் குறைவாலும் தேக புஷ்டிக் குறைவு உண்டாகித் துர்பலம் உண்டாகிறது.

## ஆகார சப்ளை விஷயம்

எனவே, ஆகார சப்ளை விஷயம் முக்கியமான பெரிய பிரச்னை. தேச பொருளாதார நிலைமையையே இது பெரிதும் அனுசரித்து இருக்கும். பட்டினியால் வருந்தும் பலகோடி மக்களுக்கு எப்படி அதிக ஆகார வசதி உண்டாக்க முடியும் என்பதும், மக்கள் வாழ்க்கை நிலையின் தன்மையை எப்படி உயர்த்துவது என்பதும், பெரியோர்களும், சர்க்காரும் கவனிக்க வேண்டிய விஷயங்களாகும். ரசாயன சாஸ்திரப்படி புதிய முறைகளை விவசாயத்தில் கையாண்டால் உணவுப் பொருள்களை விருத்தி செய்யலாம்.

[ஹெல்த் எக்ஸிபிஷன் சார்பாக 18-2-40ல் திருச்சி ரேடியோவில் செய்தபிரசங்கம்.]

மேலும் நல்ல கால் நடைகளையும் அவை மூலம் பண்ணையையும் விருத்தி செய்தும், பண்ணைகள் மூலம் பொருள்களைச் சேமித்தும் உணவுப் பொருள்களை வினியோகிக்கலாம். இந்தப் பிரச்னை சர்வ சாதாரணமானதல்ல. இதனைத் தீர்க்காலோசனை செய்து நிறைவேற்ற வேண்டுமானால் விவசாயம், கால்நடை, இன்ஜினீயரிங், கோவாபரேடிவ் முதலிய இலாகாக்களும். அவற்றின் தலைவர்களும் கலந்தே நிர்வாகம் செய்யவேண்டிய விஷயம்.

## வாழ்க்கையின் சுகாதார விதிகள்

நோயற்ற வாழ்க்கையை நடத்த விரும்பினால் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சுகாதார விதிகளைப் பின்பற்றுதல் அவசியமாகும். முதலாவது தேக சுத்தம் இன்றியமையாதது. அடுத்தபடியாக சுத்தமான இடத்தில் வசிப்பது முக்கியம். சுத்த காற்றை சுவாசிக்க வேண்டும். சுத்த தண்ணீர் குடிக்க வேண்டும். சூரிய வெளிச்சத்தைத் தக்கபடி உபயோகிக்கவேண்டும். நமக்கு நன்மை தரத்தக்க சத்காரியங்களில் ஈடுபடவேண்டும். நல்ல எண்ணங்களை மனத்திற் கொண்டு பெரியோர்கள் வழியைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். நல்ல ஆகாரத்தை மிதமாகப் புசிக்க வேண்டும்.

## சத்துள்ள ஆகார வகையின் தன்மை

மேற் சொன்ன சுகாதார விதிகளில் சத்துள்ள ஆகார வகைகளைப் பாகுபடுத்திப் புசிப்பது ஒன்று. அதைப்பற்றி மாத்திரம் சில வார்த்தைகள் இன்று சொல்லுகிறேன். உடல் வளர்ச்சிக்கு எத்தன்மையான ஆகார வகைகள் வேண்டும்? அவற்றின் அளவு என்ன? அவற்றை எவ்வாறு உணவில் சேர்ப்பது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இந்த முக்கிய விஷயத்தைப் பெரும்பாலான வைத்தியர்கள்கூட உதாசீனம் செய்துவிட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. தேகத்துக்குக் கெடுதியை உண்டுபண்ணக் கூடிய வஸ்துக்கள் கலந்த உணவுப் பொருள்கள், வியாதிகளை உண்டாக்கும். பூச்சிகளால் பாதிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் நாளடைவினால் கெட்டுப்போன ஆகாராதிகள், கலப்பற்றவைகள் இவைகள் விற்கமுடியாதபடி சட்டம் இதுவரை செய்யப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற சட்டத்தால் தான் அசுத்தமான கலப்பட உணவுப் பதார்த்தங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்தும் பொது மக்களைக் காப்பாற்ற முடியும். ஆனால் ஆரோக்கியத்துக்குத் தக்கபடி நல்ல ஆகார வகைகளை, சட்டங்கள் மூலம் ஜனங்களை வாங்கி புசிக்கும்படிச் செய்வது சாத்தியமாகுமா? ஆகாது. ஆகையால் சத்துள்ளதும் புஷ்டியுள்ளதுமான ஆகார வகைகளின் தன்மையை எல்லா ஜனங்களும் தெரிந்து கொள்ளல் வேண்டும். இந்த (Nutrition) என்னும் சாஸ்திரத்தின் நுட்பத்தை பள்ளிக்கூடங்களில் எல்லா மாணவர்களுக்கும் சுகாதார சாஸ்திரத்துடன் சொல்லித்தர வேண்டும். உணவின் சத்தின் குறைவால் இரு வகையான தொந்தரவுகள் உண்டு. இதனாலேயே ஏற்படக்கூடிய வியாதிகள் சில. தேக ஆரோக்கியத்தின் குறைவால் பற்றக்கூடிய வியாதிகள் பல.

## போதிய ஆகார வினியோகத்தின் அவசியம்

ரசாயன முறைப்படி ஆகார வகைகள் பாகு படுத்தப்பட்டிருக்கின்றன. தேக சக்தியை உண்டாக்க வல்ல உணவுப் பொருள் சுலபத்தில் ஜீரணிக்கக் கூடியதாகவுள்ள கொழுப்பு அல்லது சத்துள்ளதாக இருக்கும். மாமிச, மரக்கறி வகைகள் இரண்டாவது. இவற்றில் தேவைக்குத் தக்கபடி சேர்த்துக்கொண்டு உபயோகித்தல் நலந்தரும். மூன்றாவதாக, உலோகப் பொருள்களின் திராவகம் அல்லது ரசம் சேர்த்தல். நான்காவதாக வேண்டப்படுவது அவசியமான சத்து அதிகமாகவுள்ளவற்றை அதிக அளவுக்கு வஸ்துக்களைச் சேர்த்துக் கொள்ளுதல். ஆங்கிலத்தில் இவைகளை (Proteins, Carbohydrates, fats) என்பார்கள். இப்பொழுது இவைகள் மாத்திரம்போதாது. Minerals (உலோக சம்பந்தமானவைகளும்) Vitamins (சத்து என்று சொல்

லப்படும் சூக்ஷ்ம வஸ்துக்களும்) அவசியம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். தேக அமைப்புக்கும், தேக திடத்துக்கும் சாதகமாக இருக்கும் ரசாயனப் பாகுபாட்டின் முறைப்படி இந்த ஐந்து வகையான ஆகார வஸ்துக்களும் இயற்கையில் நமக்குக் கிடைக்கிற எல்லா வகை உணவுப் பொருள்களிலும் வேண்டுமான அளவு சேர்ந்திருப்பதில்லை. எனவே, நமது தினசரி ஆகாரத்தில் மேலே சொன்ன எல்லா வஸ்துக்களும் இருக்கின்றனவா, அவைகளைத் தகுந்தபடி அளவாக எப்படிச் சேர்த்து உபயோகிக்க சாத்தியமாகும் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

## உலோக வகைகளும் அவற்றின் சத்துத் தன்மையும்

கால்ஷியம் (Calcium), இரும்பு (Iron), அயோடின் (Iodine) முதலிய உலோகங்கள் ஆகார வஸ்துக்களில் இருக்கவேண்டும் என்பதை டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுபோலவே இயற்கையாகவுள்ள பல உணவுப் பொருள்களில் சத்துப் பொருள்கள் (Vitamins) இருக்கின்றன. அவற்றுள் சிலவற்றின் ரசாயனத் தத்வம் இன்னதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவை உடல் புஷ்டியை அதிகரிப்பதோடு, தேக சௌக்கியத்திற்கு முக்கியமானதாகவும் இருக்கின்றன.

சத்து இல்லாத ஆகார வகைகளால் வியாதிகள் பரிணமிக்கின்றன. சத்துள்ள உணவு இல்லாவிட்டால் நீடித்த வாழ்க்கை சாத்தியமாயிராது. உணவுப் பொருள்களில் இப்போது சத்து மிக மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே உணவுப் பொருள்களைத் தயாரிக்கும்போது இருக்கிற சத்து இன்னும் குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

தேகத்தில் சக்தி உண்டாவது கார்போ ஹைட்ரேட்ஸாலும், கொழுப்பு கலந்த உணவாலுமேதான். உலோக உப்பு வகைகளாலும், ப்ரோட்டினாலும், தேக அமைப்பு (உடல் வளர்ச்சி) ஏற்படுகிறது. சத்துப் பொருள்கள் தேகத்தின் விருத்திக்கு முக்கியமான ஆதாரங்களாக இருக்கின்றன. எனவே, சத்து குறையாத முறையில், சரியானபடி உணவுப் பொருள்களின் சேகரிப்பும் தயாரிப்பும் இருத்தல்வேண்டும்.

உலோக உணவுப் பொருள்களின் (Mineral salts) குறைவால் பல வியாதிகள் உண்டாவதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சோகை, அஜீரணம், எலும்பு அமைப்பில் மாறுபட்ட கூறுகள், பல் சம்பந்தமான நோய் முதலியன மேற்சொன்ன காரணத்தால் ஏற்படுகின்றன. சத்துப் பொருள் (Vitamins) சேராவிட்டால் புஷ்டி யிராது. புஷ்டி ஏற்படாவிட்டால் தேக வளர்ச்சி குன்றிவிடும். கண்ணோய், தோல், நரம்பு சம்பந்தமான பல வகைப்பட்ட நோய்கள் முதலியன விருத்தியாகும்.

## ஆகாரமும் சுகாரச் சிக்கனமும்

உண்மையாகவே உடல் வளர்ச்சிக்குப் பலவகைப்பட்ட ஆகாரங்கள் வேண்டும். அவை ருசிகரமாக இருக்கவேண்டும். பரிமாறும்போது மனத்துக்கு உகந்த மாதிரியில் காணப்படவேண்டும். உலோக உப்பும் சத்தும் அழிந்து போகாமலும் தள்ளுபடியாகாமலுமிருக்க, உணவு தயாரிக்கும் சமயத்தில் பார்த்துக் கொள்ள வேண்டும். சரியான அளவில் மேற்சொன்ன மாதிரி ஐந்து வகை சத்துக்களும் சேர்க்கப்பட்ட உணவே முறைப்படி நல்ல உணவாகும். வயதுக்குத் தக்கபடியும், தொழிலுக்குத் தக்கபடியும் அவற்றைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

நாம் சாப்பிடும் ஆகாரத்தில் கால்ஷியமும் சத்துப் பொருளும் குறைவாகவே இருக்கின்றன. பால், பழம், மரக்கறி வகைகள், கீரை, வகைகள், முட்டை ஆகிய இவற்றில் மேற்சொன்ன சத்துப் பொருளும் கால்ஷியமும் இருக்கின்றன. இவைகள் பாதுகாப்பு உணவுப் பொருள்களாகப் (Preventive foods) பாகுபடுத்

தப்பட் டிருக்கின்றன. நாம் சாப்பாட்டில் மேலே சொன்ன சத்து வஸ்துக்களை அதிகமாகக் கொண்டுள்ள உணவுப் பதார்த்தங்களையே நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இவற்றை எவ்வளவுக்கு எவ்வளவு தாராளமாக உபயோகிக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நீண்ட காலத்துக்கு தேக சக்தி குன்றாது இருக்கும். இப்போதுள்ள மாதிரி சீக்கிரம் சாகாமல் வயது நீடிக்கும். அனுபவத்தின் காரணமாகவும், பரீட்சையின் மூலமாகவும் இது நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது.

## ஆகாரத் தயாரிப்பு

ஆகாரத்தைத் தயாரிப்பதிலும் சாப்பிடுவதிலும் மூன்று முக்கிய விதிகளை அனுஷ்டிக்கவேண்டியது அவசியம்.

முதல் விதி:—கூடுமானவரை ஆகாரத்தை அதன் இயற்கை நிலையிலேயே உட்கொள்ளுதல் வேண்டும். புதியவற்றையே சாப்பிடவேண்டும்.

இரண்டாவது விதி:—உலோகத் தன்மையும், சத்துப் பொருளும் இழந்து போகாதபடி, ஆகாரத் தயாரிப்பில் கவனம் செலுத்தவேண்டும்.

மூன்றாவது விதி:—அதிகமாக உணவுப் பொருள்களை வேகவைப்பதால், சத்துப்பொருள் கெட்டுப் போகுமாதலால், ருசி கெடாதபடியும் ஜீரணிக்கக்கூடிய படியும் பதார்த்தங்களை நிதானமாக வேக வைக்கவேண்டும். பாதுகாப்பு சத்துப் பொருள்களிலேயே (Preventive foods) அதிகமானவற்றை நாம் ஆகாரத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## சூரிய கிரணங்களும், சத்துப் பொருள்களும்

சூரிய கிரணங்கள் தேகத்தில் படுவதால் உடல் வளர்ச்சிப்பெருக்கம் ஏற்படுகிறது. சூரிய வெளிச்சம் அதிகமாக இல்லாத தேசங்களில் இயற்கை அமைப்பு வசதிகள் குறைந்து, சூரியனின் ஸ்பரிசம் குறைவான இடங்களில் செயற்கையளவில் சத்துப் பொருள்களைக் கொடுத்து, தேக வளர்ச்சியைப் பெருக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக மீன் எண்ணெய் (காட்லிவர் ஆயில்) போன்ற சத்துள்ள பொருள் உபயோகிக்கப்படுகிறது. ஆனல் நம்முடைய நாட்டில் சூர்ய கிரணதாபத்திலிருந்து காப்பாற்றிக்கொள்ளும் அவசியம் ஏற்படுகிறது. இதையொட்டி பள்ளிக்கூடத்து வேலை நேரத்தை மாற்றிவைக்க உத்தேசிக்கப் பட்டுள்ள யோசனையும் சரியானதுதான்.

நகரங்களில் சிசுக்களையும் குழந்தைகளையும் போஷிக்க நல்ல பால் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. கிராமாந்திரங்களில் கடன்பட்ட நிலைமையில் வாழும் கிராமத்தானையும், சிதைந்து போன குடும்ப வாழ்க்கை நடத்தும் கிராமக் குடிகளையும் நாம் பார்க்கும்பொழுது அவர்களிடம் நல்ல பால் வசதி எப்படிக் காணமுடியும்?

## பாதுகாப்புக் கொடுக்கும் ஆகார வினியோகக் குறைவு காரணங்கள்

பாதுகாப்புக் கொடுக்கும் ஆகார வினியோகத்தில் குறைவு ஏற்படக் காரணமென்ன? அதற்கும் முக்கிய காரணம் ஒன்று உண்டு. பசுவிடம் நாம் காட்டி வந்த பக்தி, பிரியம் குறைவுதான் முக்கிய காரணம். கோசம்ரக்ஷணமும், கோ பூஜையும் இருக்க வேண்டும். நம் நாட்டில் குழந்தைகளை வளர்க்கும் தாய் பசு மாடுதான். பெற்ற தாய்க்கு அடுத்தாற்போல பசுக்கள் தான் வளர்ச்சிக்கு முக்கியம். எத்தனை வீடுகளில்-கிராமங்களில் கூட-பசுவோ அல்லது எருமையோ வைத்துப் பரிபாலிக்கப் படுகின்றது? அவற்றை வைத்துப் போஷித்துப் பால் சாப்பிடச் சக்தியும் வசதியும் உள்ளவர்கள் கூட வைத்துக் கொள்வதில்லையே. பாலின் சத்துப் பொருளையும் அவசியத்தையும் அறிந்து பசு வளர்த்தலை எல்லோரும் கொள்ள வேண்டியது அவசியம்.

நாகரிகம் அதிகரிக்க, அதிகரிக்கத் தேவையான அளவு பெற்ற தாயிடம்கூடப் பால் கிடைப்பதில்லை. மேனுட்டுப் பால் புட்டிகளைஉபயோகித்துப் பசுவின் அவசி

யத்தை மறந்து வருகிறோம். குறைந்த அளவுக்குத்தான் பழங்கள் உண்டாக்கப் படுகின்றன. நாம் சாப்பிடுவதற்கு வேண்டிய பழ வகைகளைச் சேகரிக்காமல், இதர நாடுகளுக்கு அவற்றை ஏற்றுமதியும் செய்ய நம்மவர் தூண்டப் படுகின்றனர். இதுகாறும் கிராமாந்திரங்களில் வீட்டுப் புறக்கடையில் செய்யப்பட்டு வந்த காய்கறிப் பயிர் இப்போது இல்லை. பழைய முறையிலேயே இன்னும் விவசாயம் நடந்து வருகிறது. கோழி, வாத்து, ஆடு மாடுகள் முதலியவற்றைத் தொழில் முறையில் வளர்த்து வரும் வழக்கம் ஆரம்ப தசையில்தான் இருக்கிறது. கால்நடைப் பண்ணை முதலியன மேல் நாடுகளைப் போல நம் தேசத்தில் விருத்தியாகவில்லை.

மில்கள் (Mills) மூலம் தயாரிக்கப்பட்ட வெண்மையான தீட்டரிசி தேகத்துக்குக் கெடுதியென்று நாம் தெரிந்து கொண்டு கூட அதையே தான் உபயோகிக்கிறோம். அரிசி ஆகாரம் மட்டும் இருந்து பாதுகாப்புக் குறித்தான உணவுப் பொருளில் ஒருசிலவற்றையேனும் கலக்காது சாப்பிட்டால், பெரி பெரி (Beri-beri) என்ற வியாதி ஏற்படுகிறது. கைக்குத்தலரிசி நமக்குக் காணக் கிடைப்பது கஷ்டமாகி விட்டது.

சத்துள்ள மரக்கறி வகைகள், காய்கனிகள், இவைகளின் விலை அதிகமாக இருக்கிறது. நகரங்களிலும் கிராமங்களிலும் பலவகை காய்கறிகள் கிடைப்பதில்லை. முற்காலத்தில் கிராமத்தார்கள் சாகுபடி செய்து கொண்டு கால் நடைகளை ரட்சித்துக் கொண்டிருந்தார்கள். இன்றைய காலத்து கிராமத்தார்களின் நிலைக்கும் அக்கால நிலைமைக்கும் எத்தகைய வித்தியாசம் பாருங்கள்! இக்கால நிலை, வருத்தத்தையும் விசனத்தையும் வெட்கத்தையும் உண்டாக்குகிறது.

ஆகவே, சத்துள்ள உணவுப் பொருள்களின் பிரயோசனத்தைத் தெரிந்து கொண்டு அந்த அறிவைக் குழந்தைகள் பராமரிப்பில் செலுத்தித் தக்கபடி பாதுகாப்புக்குரித்தான உணவுப் பொருள்களை அதிகமாக உபயோகித்து அவர்களை வளர்க்கவும்; நாம் சத்தும் புஷ்டியும் உள்ள ஆகார வகைகளைத் தினம் சாப்பிட்டு, உணர்ச்சியில் வாலிபத் தன்மை பெற்று, திட சரீரத்துடன் வாழவும் முயற்சிக்க வேண்டியது அவசியம், என்பதை யாவருக்கும் வற்புறுத்துவதுடன், இந்த முயற்சியில் கடவுள் நம் எல்லோரையும் ரக்ஷிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

# அறுபத்துமூவர் உற்சவம்

"கிருஷ்ண குமாரி"

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலில் அறுபத்து மூவர் உற்சவம். மற்ற நாட்களைக் காட்டிலும் அன்று விசேஷமான கூட்டம். வெகு தூரத்திலிருந்தெல்லாம் ஜனங்கள் வந்திருக்கிறார்கள். ஸ்வாமி புறப்பட்டு வீதியில் வருவதென்னமோ பிற்பகல் இரண்டு மணிக்கு மேற்பட்டுத் தான். ஆனால் மணி புன்னிரண்டாவதற்குள் வீதியில் எள்ளுப் போட்டால் எள் விழாது. மண்டை வெடித்துப் போகும்படியான வெய்யிலையும் பாராட்டாமல், ஜனங்கள் வீதியிலுள்ள வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு இங்குமங்கும் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு, வீட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு காமு, தன் சிநேகிதி மீனுவுடன் ஸ்வாமி பார்ப்பதற்காக அவள் வீட்டைத் தேடிச் சென்றாள்.

காமு:—இதுதான் மீனுவின் அகம்போலிருக்கிறது—மீனு! மீனு!—(கதவைத் தட்டி) மீனு ஆத்திலிருக்கிறாளோ?

மீனு:—யாரு காமுவா?—காமு! வா! இந்த வீடுதான். (உள்ளே அழைத்துச் செல்கிறாள்) எச்சு! அந்த பாயை எடுத்து இப்படிப் போடு! வெற்றிலைத் தட்டையும் எடுத்துண்டு வா!

காமு:—என்னத்துக்கு! தரை நன்றாய்த்தானிருக்கு. கீழேயே உட்கார்ந்துண்டா போறது.

மீனு:—தேவலை உட்காரு.

காமு:—அடே அப்பா! என்ன கூட்டம்! உங்காத்துக்கு வருவது எனக்குப் போதும் போதுமென்றாய் விட்டது. இந்த நெருக்கடியிலே மோட்டார் வண்டிகளை யாவது விடாமலிருக்கிறார்களா? அதுவுமில்லை. மீனு! உன் வீடும் ரொம்ப தூரத்திலே இருக்கு அம்மா! நடந்து நடந்து வழி மாளவில்லையே! வேறே ஊருக்குப் போகிற மாதிரியாக வன்னே இருக்கு?

மீனு:—எல்லாம் எனக்கு வந்து சேர்ந்திருக்காரே அந்த பிராமணர் வேலைதான். ஊருக்கெல்லாம் கோடியில் எங்கேயோ ஒரு சந்தில் ஒரு "முக்கோட்டையை"ப் பார்த்துப் பொறுக்கியிருக்கிறார். வீடா இது! நீயும் நானும் சேர்ந்து இருக்கப் படாதாம். அவ்வளவுதான்! அவர் சுபாவமே அப்படித்தான் பிறரை வயற்றெரிச்சல் கொட்டிக் கொள்றதிலே ரொம்ப சந்தோஷம்.

காமு:—உன் பிள்ளை கிட்டுவை வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் ஆத்துக்காரரைப் பற்றிப் பேசுகிறாயே! அது நீ சொல்றதை எப்படிக் கவனித்துக் கேட்டுண்டிருக்கு பாருடி! ஒண்ணுமில்லையடா கண்ணு! அம்மா வேறே யாரையோ பற்றிப் பேசிக் கொண்டிருக்கா. நீ அதையெல்லாம் கவனிக்காதே.

மீனு:—அட இழவே! அதுக்குப் புரிகிறது போலேதான் இருக்கு!

காமு:—சீ சீ! அப்பாவைப் பற்றி இங்கே யார் பேசறா!

மீனு:—காமு! அந்த அழகான அப்பா ஒருநாள் செய்த காரியத்தைச் சொல்றேன் கேளு. என்னமோ பூப்போடுகிற நூலாமே! அது வேணுமென்று செல்லம் எழுதியிருந்தா. பட்டு நூலென்று நான் படித்து படித்துச் சொல்லியிருக்கும்பொழுது வெறும் நூலை இத்தனை வாங்கிக் கொண்டுவந்து நிற்கிறது குட்டிச்சுவர் மாதிரி! மண்டையில் மூளைக்குப் பதிலா களிமண்ணை வைச்சு அடைச்சிருக்கோ என்னமோ தெரியல்லை.

காமு:—எல்லாம் எங்காத்துக்கு ஜோடி தான். அது கிடக்கட்டும். நாழி யாச்சே! போகலாமா? இன்று அலங் காரம் ரொம்ப நன்றாயிருக்குமாம்.

மீனு:—என் ஒவ்வொரு நாளும் திவ்விய மாய்த்தா னிருக்கு.

காமு:—சரி சரி! கிளம்பு.

மீனு:—அப்படிச் சரேலென்று கிளம்பி விட முடியுமா? எச்சு! வெள்ளிப் பாத்திரங்களை யெல்லாம். அலமாரி யிலே வைத்துப் பூட்டி விட்டுச் சாவி யைக் கொண்டுவா. எத்தனை நாழி? அந்தக் குங்குமச் சிமிழையும் கண் ணாடியையும் எடு. (எச்சு கண்ணாடியை மாத்திரம் கொண்டு வருகிறாள்) அட கர்மமே! கண்ணாடியை மாத்திரம் கொண்டு வந்தா என்ன பண்ணித் தொலையறது? சரி போ, அப்படியே கொஞ்சம் தீர்த்தமும் கொண்டுவா! (தீர்த்தம் கொண்டு வருகிறாள் எச்சு) பாத்திரத்தில் வழிய வழிய இப்படித் தானா கொண்டு வருவது? குட்டிச் சுவரே! எப்படிச் சாப்பிடுகிறது? பீரோ சாவி எங்கே? இங்கேதானே போட்டேன்!

காமு:—மீனு! இந்தப் புடவை எப்போ வாங்கினே? ரொம்ப நன்னாயிருக்கு. என்ன விலை? ஜம்புசாமி கடையா?

மீனு:—விலை மாத்திரம் கேட்காதே. காமு! என்னமோ ரொம்ப நாளா ஆசையா யிருந்ததே என்று வாங்கி விட்டேன். நாப்பத்தெட்டு ரூபாய்க்கு தம்பிடி குறைக்கமாட்டேன் னுட் டான்.

காமு: என்னமோ அம்மா! விலை ஏறக் குறைய இருந்தாலும் புடவை திவ்விய மாய்த் தானிருக்கு.

மீனு:—போறது அந்த மட்டும் திருப்தி தான். இதோ கிளம்பிவிட்டேன், வா. போகலாம்— கிட்டு நீ எங்கே பின் னேடே வரே? உன்னை அந்தக் கூட் டத்திலே எப்படி அழைச்சிண்டு போறது? அது முடியாது. உள்ளே போ! கோணிக்காரன் பார்த்தா புடிச் சுண்டு போய்விடுவான். கத்தினா என்ன செய்யறது? கோணிக்காரனைக் கூப்பிடட்டுமா? தாயி! குழந்தை யைப் பார்த்துக்கோ! நாங்கள் போய் விட்டு வரோம். வாசல் கதவைச் சாத் திக்கொள்ளுங்கள் (வெளியே வருகி றாள்) அம்மாடி, என்ன கூட்டம்! இந்தக் கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு நாம் எப்படிப்போகிறது? காமு! சமுத்திரத்திலே அலை பிரண்டு வராப்பிலே இதோ ஒரு கூட்டம் மேலே வந்து மோதுகிறதே! (கூட் டத்தில் போகும்போது அப்பா! உனக்குப் புண்யமுண்டு. இப்படி மேலே வந்து விழாதே! நல்ல வேளை கிட்டுவை அழைச்சிண்டு வராதே இருந்தோம்.

காமு:—(எதிரே வரும் ஒரு அம்மாளைப் பார்த்து) ஏன் அம்மா! நீங்கள் கோவிலிலிருந்து தானே வரேள்? ஸ்வாமி எங்கிருக்கார் தெரியுமோ? கிட்டப்போய் தரிசனம் பண்ண முடியுமோ?

அம்மாள்:—ஸ்வாமி கிழக்கு வீதிக்கோடி யிலே இருக்கார். கிட்டப்போய் தரி சனம் பண்ண முடியாமே என்ன? மனசு வச்சா முடியாத காரிய முண் டோ?

காமு:—(மெதுவாய்) இந்த தத்து வத்தை யெல்லாம் யார் கேட்டா? கேட்டதுக்குப் பதில் சொன்னு போறாதோ?

மீனு:—வாய்ப் பேச்சுக்கென்ன பஞ்சம்? எவ்வளவுவேணு பேசலாம்.

(சுவாமி அருகில் சென்று)

காமு:—அப்பா! மெள்ள எப்படியோ வந்து சேர்ந்து விட்டோம். மீனு கையை விட்டு விடாதே. கெட்டியாப் பிடிச்சுக்கோ! இல்லாட்டா ஒருவரை யொருவர் தேடிக்கிண்டு திண்டாடும் படியாய் விடும்.

மீனு:—அம்மாடி! இங்கே என் கால் போயிடுத்து. யாரோ நன்னு மிதித்து விட்டார்கள்!

(550-ம் பக்கம் பார்க்க.)

# மளிகைக் கடை மாணிக்கஞ் செட்டி.

[ஜி. பாலசுப்ரமண்யம், மாயவரம்]

## அத்தியாயம் 14

கும்பகோணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட கம்பெனியானது மேற் கூறியவாறு மேன்மேலும் விருத்தியடைந்து கொண்டும் குப்புடு, ராமுடு இவ்விரண்டு பேரும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்துகொண்டும், கம்பெனி வரவுசெலவு கணக்குகளை ஒழுங்காய் நடத்திக் கொண்டும் வந்தார்கள், நாளடைவில் கம்பெனி ஆபீசில் 50 குமாஸ்தாக்கள் வேலை செய்து வந்தார்கள். இந்தக் கம்பெனி வேலைக்காகவென்று தனியாய் அவ்வூர் பாங்கில் இரண்டு குமாஸ்தாக்கள் நியமனம் செய்யப்பட்டு வேலைசெய்து வந்தார்கள். இக்கம்பெனியின் நடைமுதல் கணக்கில் இக்கம்பெனிக்காகச் செலுத்வேண்டிய தொகைகளை பாங்கிலேயே செலுத்தி, அந்த ரசீதுகளைக் கம்பெனி ஆபீசில் அவரவர்கள் கணக்குக்காக வரவு வைத்துக் கொள்ளும்படி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இக்கம்பெனி மூலமாய் வெளியூர்களுக்குப் போகும் சரக்குகள் சம்பந்தமாயுள்ள ரயில்வே ரசீதுகள், பில்கள் முதலானவைகளை அனுப்பவும், இக் கம்பெனிக்காக வெளியூர்களிலிருந்து வரும் சரக்குகளுக் குண்டான பில்களை வசூலிக்கவும் பாங்கில் பிரத்தியேகமான குமாஸ்தா நியமனம் செய்யும்படி அவ்வளவு வேலை ஏற்பட்டு விட்டது. தென் இந்தியாவில் இக் கம்பெனிக்கு எல்லோரும் மெச்சுக் கொள்ளும் படியான பிரசித்தி ஏற்பட்டுவிட்டது. கம்பெனி வேலைசெய்ய ஆரம்பித்து ஒரு வருஷம் முடிவடைந்த வுடன் லாபநஷ்டக் கணக்குப் பார்த்ததில், எச்செலவும் போக ரூ. 25,000 நிகர லாபம் கிடைத்துவிட்டது. வக்கீல் இராமலிங்கய்யர் கம்பெனிக்குவந்து செட்டியாரைப் பார்த்து அவர் திறமையைப் பற்றி மிகவும் சந்தோஷத்துடன் மெச்சுக்கொண்டார். வருஷாந்திர கோஷ்பாரா கணக்கானது ஆடிட்டர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அமர்கள் அத்தாக்ஷியுடன் மீட்டிங்கில் வைக்கப்பட்டது.

மீட்டிங்குக்கு இராமலிங்கய்யரும், பண்ணை கோவிந்தய்யரும் வந்திருந்தார்கள். பங்குக்காரர்களுக்கு லாபத்தில் நூற்றுக்குப் பதினைந்து வீதம் பிரித்துக் கொடுக்கும்படியாயும், மாணிக்கம் செட்டியாருக்கு ரூ. 1,500, பிரத்தியேகமாகக் கொடுக்கும்படியாயும், ரூ. 1000 குப்புடுவுக்கும், ராமுடுவுக்கும் சமமாய்ப் பிரித்துக் கொடுக்கும்படியாயும், பாக்கித் தொகையை க்ஷேம நிதிக்காக விலக்கப்பட்டு அத்தொகையை பாங்கியில் நிர்ணயத்தவணை டிபாசிட்டாகப் போடும்படியாயும் தீர்மானம் செய்துவிட்டார்கள். மாணிக்கம் செட்டியாருக்கு இவ்வளவு நன்றாய் கம்பெனி வியாபாரம் செய்துவந்ததானது, மிக்க உத்சாகத்தை உண்டாக்கிற்று. ராமுடு தனக்குக் கிடைத்த ரூ. 500-யும் தன் தகப்பனார் அனுமதியின்பேரில் தன் தாயாரிடம் கொண்டு கொடுத்து அவளுக்கும் தன் தகப்பனாருக்கும் நமஸ்காரம் செய்து அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான். ராமுடு இம்மாதிரி சம்பாதித்து வந்தது தன் தாயாருக்கு மிகவும் திருப்தியை அளித்தது. சர்க்கார் வேலையில் அமர்ந்திருந்தால் மாதச்சம்பளம் முழுவதும் செலவழித்து ஊரிலிருந்து அரிசி மூட்டையும் மேற்கொண்டு பணமும் அனுப்ப வேண்டியிருக்குமே யொழிய, ஒரு காசுகூடத் தன் சம்பாத்தியத்திலிருந்து வீட்டுக்குக் கொடுக்க முடியாது என்ற விஷயம் அவளுக்கு இப்போது நன்றாய்த் தெரிந்தது.

இம்மாதிரி இக் கம்பெனியின் வியாபாரம் வரவர விருத்தியாய்க் கொண்டு கம்பெனியின் 5-வது வருஷக் கடைசியில் ரூ. 30,000 பெறும்படியான பெரிய கட்டடமும், ரூ. 50,000, க்ஷேமநிதியும் ஏற்பட்டு விட்டது. பங்குக்காரர்களுக்கு நூற்றுக்கு ரூ. 25/ வீதம் லாபம் கிடைத்துக்கொண்டிருந்தது. இவ்வளவும் மாணிக்கம் செட்டியாரின் அனுபோகத்தினாலும், அவர் நெறியோடும் சிக்கன முறையிலும் நடத்திவந்ததினால்தான்.

## அத்தியாம் 15

கம்பெனி நடந்த ஐந்து வருஷங்களுக்குள் அதற்கேற்பட்ட லாபத்தைப் பற்றியும், ஜனங்களுக்கு அதனால் உள்ள சௌகரியங்களைப் பற்றியும், கம்பெனியின் கீர்த்தியைப் பற்றியும் முன் அத்தியாயத்தில் கூறினோம். இதே சமயத்தில் கொட்டையூரில் ராமுடுவின்

சம்சாரம் கங்கம்மாள் என்ன செய்து கொண்டிருந்தாளென்றும், அவளால் கொட்டையூருக்கு எவ்வளவு கீர்த்தி வந்ததென்றும் இந்த அத்தியாயத்தில் காணலாம்.

கங்கம்மாளின் கல்வியைப் பற்றியும் அவளுக்கு, தேசிய விஷயங்களில் இருந்த உணர்ச்சியைப்பற்றியும் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அவள் புக்ககத்திற்குவந்து ஒரு வருஷ காலத்திற்குள் அவள் குடும்ப காரியங்களின் வரவு—செலவுகளை நன்றாய்க் கவனிக்க ஆரம்பித்து விட்டாள். குடும்ப சொத்திலிருந்து வரும்படியையும் விருத்திசெய்து கொள்ள முயன்று வந்தான். அவளுக்குச் சொந்தமான புன்செய் நிலங்களில் காய்கறி வகையறு பயிர் செய்துகொண்டும், வாழை முதலிய பல விருக்ஷங்கள் வைத்தும், அதனால் அதிக வரும்படிவர ஆரம்பித்தது. மாடு கன்றுகளைச் சரிவர கவனித்தும் பண்ணைவேலைக்காக ஏற்பட்டுள்ள மாடுகளைச் சரியாய்ப் பார்த்துக் கொண்டும், மாட்டுக் கொட்டில்களைத் தினசரி சுத்தம்செய்து, அந்தக் குப்பைகளையும் சாணியையும் வீண் செய்யாமல் எருவுக்காக அனுப்பியும், சாகுபடி இல்லாத காலங்களில் பண்ணையாட்களுக்குத் தோட்டத்தில் செப்பனிடும்படி வேலைகள் கொடுத்தும் கவனித்து வந்தான்.

தன் குடும்பத்துக்கு வேண்டிய காய்கறிகளை வைத்துக்கொண்டு, மிகுதியாயுள்ளவைகளை விற்றுவிடும்படி செய்வாள். பண்ணையில் உள்ள ஆட்களுக்கு வேலையும் பூராவாக இருக்கும். அவர்கள் காலக்ஷேபத்துக்குத் தகுந்த சம்பளமும் கிடைக்கும்.

ஒவ்வொரு வேலை ஆட்களின் குடும்ப சமாசாரம் முழுவதும் கங்கம்மாளுக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் வீட்டில் எந்த விசேஷங்கள் நடந்தாலும் அவர்களுக்கு வேண்டியதை அவள் கொடுப்பாள். ஏதாவது உடம்பு அசௌகரியம் என்று எந்த ஆளாவது சொன்னால் அதற்குத் தகுந்த மருந்து அவனுக்குக் கொடுப்பாள். பண்ணையாட்கள் ஒவ்வொருவரும் இவள் எந்தக் காரியம் சொன்னாலும் மிக்க உத்சாகத்துடனே செய்வார்கள். கங்கம்மாள் அவ்வாட்களுக்குத் தாயார் ஸ்தானத்தில் இருந்தான் என்று சொல்லலாம்.

தவிர, அவ்வூரில் இருந்த உயர்தர ஸ்திரீ ஜாதிகளுக்கு இவள் நல்ல புத்திமதி சொல்லிக் கொண்டு, அவர்களுக்கும் தேசிய உணர்ச்சியை உண்டாக்கி வந்தாள். அங்குள்ள ஒவ்வொரு ஸ்திரீயும் ஒருமணி நேரம் ராட்டினத்தை உபயோகித்து நூல் நூற்கும்படி பழக்கி விட்டாள். அவர்களெல்லோரும் அவரவர்கள் புருஷனுக்கு வேண்டிய வஸ்திரத்துக்குத் தேவையான அளவு நூல் நூற்றுக் கொடுத்ததோடுகூட நூலும் நூற்று விற்பனைக்கு அனுப்ப ஆரம்பித்து விட்டார்கள்.

கங்கம்மாள் புக்ககத்துக்கு வந்த ஐந்து வருஷ காலத்துக்குள் அவ்வூரிலுள்ள ஸ்திரீகளுக்கு ஈசுவர பக்தியையும் உண்டாக்கி ராட்டினத்தையும் நன்றாய் உபயோகிக்கக் கற்பித்து, அங்குள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் சுபிக்ஷம் உண்டாகும்படி செய்தாள். அங்குள்ளவர்களுக்குச் சோம்பலே கிடையாது. எப்போதும் வேலை செய்தவண்ணமாகவேயிருந்தார்கள். வேலைக்குத் தகுந்தவாறு கூலியும் கிடைத்தது. ஆகையால் வேலை செய்வதில் உத்சாகம் ஏற்பட்டது. கெட்ட நடவடிக்கைக்கு இடமே இல்லை. ஒரு வாரத்துக்கொருமுறை கங்கம்மாள் எல்லோரையும் கோவிலுக்கு அழைத்துப்போய் தான் ஸ்தோத்திரங்கள் பாடி அவர்களைக் கேட்கச் சொல்லி, அவ்வாறு அவர்களுக்கு ஈசுவர பக்தி வரும்படி செய்தாள். பண்ணை கோவிந்தய்யருக்கும் அவர் சம்சாரத்திற்கும் இவள்பேரில் உண்டான பிரியத்துக்கும் சந்தோஷத்துக்கும் அளவே இல்லை.

கோவிந்தய்யர் சம்சாரம் ஒருநாள் காவிரி ஸ்நானம் செய்து வீட்டிற்கு வந்த உடன், ஒரு மயக்கமாய்வந்து படுத்துக்கொண்டாள். டக்டர்களை அழைத்துக்கொண்டு வருவதற்கு முன், திடீரென்று காலஞ்சென்றாள். இது ராமுவுக்கும் கங்கம்மாளுக்கும் மிகுந்த வருத்தத்தை யுண்டுபண்ணிற்று. கோவிந்தய்யரும் தனக்கு அன்றுவரையில் சிசுருஷை செய்துவந்த சம்சாரம் திடீரென்று தவறிப் போனது மிகவருத்தத்தை யுண்டுபண்ணினாலும், தனக்குள்ள விவேகத்தினால் அதை அதிகமாய்ப் பாராட்டாமல் தன் பிள்ளைக்கும் மருமகனுக்கும் சமாதானம் சொன்னார். கொட்டையூர் முழுவதிலும் இந்த சமாசாரம் சிறிது நேரத்திற்குள் பரவி எல்லோரும் அவரவர்கள் சம்சாரத்துடன் அங்குவந்து விட்டார்கள். மாணிக்கம் செட்டியாருக்கு இதனால் ஏற்பட்ட வருத்தம் சொல்லி முடியாது. அவர் உடனே கும்பகோணம் இராமலிங்கய்யருக்குச் சொல்லியனுப்பி அவரும் வந்து சேர்ந்தார். மேல் நடக்கவேண்டிய காரியங்கள் நடந்து, பிறகு நடக்கவேண்டிய

கர்மங்களும் நடந்தேறியது. அந்தம்மாளுக்கு வயது 55 ஆயிருந்தது. தன் பிள்ளைக்கு ஆறுதல் சொல்லி, தன் தாயார் மிகவும் பாக்கிய சாலியென்றும் அவளிருக்குமளவும் ஒரு துக்கமும் பார்க்கவில்லை யென்றும், மிகவும் சந்தோஷத்துடன் அவள் உயிர் துறந்தாள் என்றும் கோவிந்தய்யர் சொல்லிக் கொண்டிருந்தார். நாளடைவில் இந்த துக்கம் குறைந்து வந்தது. கோவிந்தய்யருக்குக் குடும்பத்தில் பற்றுதல் விட்டுத் தான் சன்னியாசி ஆசிரமும் வாங்கிக்கொள்ள இஷ்டப்பட்டார். இதைத் தன் சம்பந்தி இராமலிங்கய்யரிடம் சொல்லிக் குடும்ப பாரத்தை அவரிடம் ஒப்புவித்துத் தன்னை அந்த பந்தத்திலிருந்து விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டார். இரண்டுமாத காலத்தில் அவர் எண்ணப்படி சங்கியாசம் வாங்கிக்கொண்டுவிட்டார். ராமுடுவும் நல்ல கல்வியும் விவேகமும் உள்ளவனாகையால், தன் தகப்பனார் இஷ்டப்படி நடக்கத் தடை சொல்ல வில்லை. ஆனால் தான் அவருக்கு எப்போதும் சிசுருஷை செய்துவரும்படி அனுமதிகேட்க, அதற்கிணங்கினவராய் கோவிந்தய்யர் ஆசிரமம் வாங்கியும் கொட்டையூர் மடத்திலேயே இருப்பதாக வாக்களித்தார். பிரதிதினமும் ராமுடுவும் அவன் சம்சாரமும் அவருக்கு வேண்டிய சிசுருஷைகளைத் தவறாமல் செய்து வந்தார்கள். மாணிக்கம் செட்டியார் இவரை குரு ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு காலையிலும் மாலையிலும் இவரிடம் போய் வந்தனம் செய்துகொண்டு சற்றுநேரம் இவருடன் உட்கார்ந்து கொண்டு இருந்து வருவார்.

அவ்வூரிலுள்ளவர்களுக்கு ஆத்மார்த்தமான விஷயங்களை ஒவ்வொருதினமும் அரை மணி நேரம் மடத்திலிருந்தபடி கோவிந்தய்யர் போதித்து வந்தார். மாணிக்கம்செட்டியாரின் தருமங்களும் ஒழுங்காய் நடைபெற்று வந்தன. இவருக்கும் வயோதிக காலம் வந்துகொண்டிருந்தமையால், கொஞ்சம் கொஞ்சமாய் வியாபாரத் துறையிலிருந்து விலகிக்கொண்டே ஊரிலேயே தர்ம காரியங்களில் அதிககாலம் செலவழித்து வர ஆரம்பித்தார். கொட்டையூரிலுள்ள ஜனங்கள் ஒரு குறைவுமின்றி க்ஷேமமாயும், ஈசுவர பக்தியுடனும் காலங் கழித்து வந்தார்கள். கொட்டையூரானது வெகு ஜனங்கள் வெளியூரிலிருந்து வந்து பார்த்து மிகவும் மெச்சுக் கொள்ளும்படியான அவ்வளவு நல்ல ஸ்திதியிலிருந்தது.

(முற்றிற்று.)

---

(547-ம் பக்கத் தொடர்ச்சி)

காமு :—மீனு! ஸ்வாமியைப் பாரு! என்ன அழகு! என்ன அலங்காரம்! கண் கொள்ளாச் சேர்வையா யிருக்கு.

மீனு :—அடாடா! பார்க்கப் பதினாயிரம் கண்ணிருந்தாலும் போராது. இந்த அறுபத்துமூவர் அன்றைக்கே அலங்காரம் ஒரு தனி அழகாய்த்தானிருக்கு. எங்கிருந்துதான் இவ்வளவு புஷ்பங்கள் வரவழைச்சு, யார்தான் இவ்வளவு விதரணையா அலங்காரம் செய்கிறார்களோ? எல்லாம் கபாலீசுவரர் மகிமை!

காமு :—போறது. இவ்வளவு கஷ்டப்பட்டு நன்னா தரிசனம் பண்ணியாச்சு. இந்தக் கூட்டத்தைத் தாண்டித் திரும்பி ஆத்துக்குப் போய்ச் சேரணுமே! அதுதான் கவலை.

மீனு :—காமு! ராஜரத்தினம் நாதஸ்வரமாம். கொஞ்சம் அதையும் கேட்டு விட்டுப் போகலாம்.

இவ்வளவு வைபவத்துடன் மீனுவும் காமுவும் அறுபத்துமூவர் உற்சவம் பார்த்துவிட்டு ஒரு வழியாய் வீடு திரும்பினார்கள்.

# BOOKS

By
**K. S. VENKATARAMANI**

### JUST PUBLISHED

| | | Rs. As. |
|---|---|---|
| 1. | **A Day with Sambhu** (In Hindi) ... | 0 3 |

| | Rs. A. |
|---|---|
| 2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ... | 1 8 |
| 3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged) | 2 0 |
| 4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition | 1 0 |
| 5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English, Second Edition) | 0 8 |
| 6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ... | 1 0 |
| 7. **Murugan, the Tiller** (A Novel of Indian Rural Life) Third Edition | 2 0 |
| 8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition | 1 0 |
| 9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ... | 1 0 |
| *Booklets :* | |
| 1. **The Indian Village** (A Ten-Year Plan) ... | 0 8 |
| 2. **Dr. Annie Beasant** A Tribute ... | 0 4 |

| | Rs. A. |
|---|---|
| 3. **High Ways of Astrology** By Kumbha. Second Edition ... | 1 8 |
| 4. **Venkatramani:** Writer and Thinker By Manjeri S. Isvaran ... | 0 8 |
| *In Tamil :* | |
| 1. **Kandan, The Patriot** (By the Author himself) ... | 1 0 |
| 2. **Murugan The Tiller** By Krishna Kumari (M. L. J. Office, Mylapore) | 1 8 |
| 3. **The Indian Village** (By the Author himself) ... | 0 2 |
| *In Telugu :* | |
| 1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ... | 1 8 |
| 2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |
| 3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |
| *In Sanskrit :* | |
| 1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ... | 0 4 |

## *SOME OPINIONS*

1. Mr. Venkataramani writes beautifully about Indian village life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—HAMILTON FYFE in *The Daily Chronicle.*

2. Mr. Venkataramani is a Village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

3. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

4. One of the foremost writers of India; an Indian Thinker.—*Public Opinion.*

The following books have been approved for Library use by the Madras Text-Book Committee: Vide Fort St. George Gazette (Part IB) Supplement dated 2nd June 1936. (Consolidated list of approved books).

*Approved for Library use :*

| *English :* | Vide page of the Ft. St. George Gazette | | Rs. A. |
|---|---|---|---|
| Paper Boats | 57 | ... | 1 0 |
| A Day with Sambhu | 57 | ... | 0 8 |
| The Indian Village | 53 | ... | 0 4 |
| *Tamil:* | | | |
| Our Village Life | 155 | ... | 0 2 |
| *Sanskrit:* | | | |
| *Approved for Class use:* | | | |
| Sambhu-Caryopadesa By Y. Mahalinga Sastri | 215 | ... | 0 4 |

**SVETARANYA ASHRAMA, 7, North Mada Street, Mylapore, Madras.**




# பூனைக்கு மணி கட்டினால்

[சக்கரவர்த்தி, பம்பாய்]

எல்லாருக்கும் கடைசிக் குழந்தை என்றால் கொஞ்சம் பிரியம் ஜாஸ்தி. கடைக்குட்டி அப்பாவை இரண்டு அடி அடித்தாலும் பட்டுக்கொள்வார், அம்மா அதனிடம் இரண்டு உதை பட்டாலும் அதைத் தழுவிச் செல்லம் கொடுப்பாள். மணி கடைக்குட்டியாதலால், அவன் தாயாருக்கும் தகப்பனுக்கும் மிகவும் பிரியம்.

வேங்கட ஐயர் ஊருக்கே பெரிய வக்கீல். அவர்தான் மணியின் தகப்பனார். மணியின் பேரில் அவருக்கு உயிர். அவன் எதைக் கேட்டாலும் செய்வார். "அப்பா இன்னிக்கு என்னோடே பள்ளிக்கூடத்திற்கு வரணும்" என்று செல்லக் குழந்தை சொன்னால் அவர் பள்ளிக்கூடத்திற்குச் சென்று ஒரு வழியாக அவனைச் சமாதானப் படுத்திய பிறகுதான் கோர்ட்டுக்குப் போவார்.

மணியின் தாயாரின் பெயர்தான் மங்களம். அந்தம்மாளிடம் மணிக்கு அதிக அன்பு. அன்பினால்தான் அந்த அம்மாளை அவன் அதிகமாகக் கஷ்டப்படுத்தினானோ என்னமோ, குழந்தை அழ ஆரம்பித்தால் சமாதானம் செய்ய அந்தம்மாள் ஒருத்தியால்தான் ஆகும்.

ஒருநாள் மணி பூனை வேண்டுமென்று அழத்தொடங்கினான். பூனையோ அனாசாரம். அம்மாளோ ஒன்னு நம்பர் வைதீகம்.

"என்னா, பூனைப் பாலைக் குடிச்சுட்டுப் போயிடுமே என்றாள் மங்களம்"

"போனாப் போகிறதேடி, எப்படியாவது ஒங்கொழந்தை அழாட்டா சரி."

"என்ன இப்படி சொல்றேளே நாளைக்கு ஆபீசுக்கு போகச்சே குறுக்கே வந்து நின்னதானா என்ன பண்றது?"

"ஆமாண்டி, பூனை குறுக்கே நின்னா அதை விரட்டி விட்டுப் போகலாம், ஒம் பிள்ளை குறுக்கே நின்னா அன்னிக்கி ஆபீஸே இல்லாமே போறதடி."

"என்னமோ சொன்னேன், ஆனா வாங்கிக் கொடுங்கோ. எப்படியானாலும் கொழந்தை சந்தோஷப் படட்டும்."

பூனை வந்து இரண்டு நாளாய் விட்டது. வீட்டில் சப்தமே இல்லை. அப்பா, அம்மா இருவருக்கும் கொஞ்சம் ரெஸ்டு. பிள்ளையோ பூனையுடனேயே காலங் கழித்தான். மூன்றாவது நாள் பூனையின் கழுத்தில் அவன் ஒரு மணியைக் கட்டினான்! பூனை அசையும் போதெல்லாம் மணியடித்தது. குழந்தை இதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தது. தாயும் தந்தையும் இதை அனுபவித்தார்கள்.

அடுத்த வீட்டில் ஆனந்தராம ஐயர் இருந்தார். இவருக்கு இது சுத்தமாகப் பிடிக்கவில்லை. "நாமும் கோர்ட்டுக்குப் போய்விட்டு, வருகிறோம். அவரும் அதைத்தான் செய்கிறார். அவருக்கு மாத்திரம் பணம் அந்தஸ்துகளெல்லாம் உண்டு. நமக்கு மாத்திரம் ஏன் இருக்கப்படாது?" என்றெல்லாம் அவர் யோசிப்பார். தக்க சமயம் வாய்த்ததென்று தீர்மானித்தார்.

மறுநாள் காலை அவர் ஜீவரக்ஷண சபைத் தலைவரிடம் ஓடினார். அவருடன் ஆலோசனை செய்தார். ஒரு வழியாக

முடிவுக்கு வந்தார். ரொம்பவும் சந்தோஷப்பட்டார். "வெற்றியடைந்தேன்" என்று நினைத்தார். தான் பழிவாங்கி விட்டதாகப் பாவித்தார். தான் முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியத்தை ஒருவன் செய்து விட்டால் அவன் எவ்வளவு சந்தோஷப் படுவானோ, அவ்வளவு சந்தோஷத்தை யடைந்தார். "ஐயோ! ஈசா! மனிதனுக்கு வயிற்றெரிச்சலால் மற்றொருவனுக்குத் தீங்கிழைத்தலில் இவ்வளவு ஆனந்தமிருக்கலாமா! வக்கீல் வேங்கடத்திற்கு கோர்ட்டிலிருந்து ஸம்மன் வந்தது. அவர் பேரில் ஜீவ ரக்ஷண சங்கத்தார் ஒரு கேஸு கொண்டு வந்திருந்தார்கள். அதற்காகத்தான் கோர்ட்டு செல்லவேண்டியதா யிருந்தது.

மறுநாள், கோர்ட்டில் ஜீவரக்ஷணச் சபைத் தலைவரின் சார்பாக வக்கீல் அனந்தம் பேசியதாவது:—"ஐயா நீங்கள் ஒரு பூனையை வளர்க்கிறீர்கள் அதன் கழுத்தில் ஒரு மணியையும் கட்டியிருக்கிறீர்கள், அப்படி நீர் கட்டினது குற்றம். எப்படி அது குற்றம் என்பதை நான் எடுத்துச் சொல்லுகிறேன். ஐயா பூனைக்கு மணி கட்டினீரே, அப்போ உம் புத்தி எங்கே போச்சு? மணி கட்டலாமா கூடாதா என்று ஏனய்யா நீர் யோசனை செய்யவில்லை? நீர் மாத்திரம் பத்து பேருக்கு யோசனை சொல்ல வருகிறீரே! உம்ம விஷயத்தில் மாத்திரம் ஏனய்யா மறந்துவிட்டீர். நீர் பிரதம வக்கிலானல், சட்டத்தை உம்ம கையிலேயே எடுக்கலாமா? நீரே உம்ம பூனைக்கு மணி கட்டலாமா. அது சட்டப் பிசகு என்று தெரிந்திருந்தும்......"

"யுவர் ஹானர், இவர் என்னை என்ன கேள்வி வேண்டுமானாலும் கேட்கட்டும். என்னைத் திட்டுவதற்கும், அவமானப் படுத்துவதற்கும் இவருக்கு அதிகாரம் இல்லையாதலால், தாங்கள் இவரை இப்படிப் பேசாமலிருக்கச் சொல்ல வேண்டும்." என்று வேங்கடம் விண்ணப்பித்துக் கொண்டார்.

"ஸாரி ஸார், இந்த விஷயத்தைக் கேளுங்கள். பூனையின் ஆகாரம்; அல்லது அதன் முக்கிய ஆகாரம் எலிதான். பூனைக்கு அதைத் தின்பதில் மிகவும் சந்தோஷம். மணிசத்தம் கேட்டு எலி ஓடி விடுகிறது. பூனையின் வாய்க்கு மண் தான் மிச்சம். இம்மாதிரி வாயில்லா ஜந்து ஆகாரம் தேடுவதில் தடை செய்தது உம் மீது குற்றமே. இது பெரிய தவறு." என்று பதில் கொடுத்தார் ஜட்ஜ்.

நம்ம வக்கீல் திகைத்து நின்றார். என்ன பதிலளிப்பதென்று அவருக்குப் புரியவில்லை. ஒரு நாள் டயம் வாங்கிக் கொண்டு வீடு சென்றார்.

அன்றுமாலை "எல்லாம் உன் பிள்ளையாலேதாண்டி"

"அவன் என்ன பண்ணுன்? குழந்தையை ஒன்னுஞ் சொல்லாதேயுங்கே. அதுபாட்டுக்கு பூனை வாங்கிக் குடுத்தா விட்டுபரம சமத்தாவிளையாடிண்டிருக்கு"

"எல்லாம் அந்தப் பூனையாலேதான். முதல்லே அதை வீட்டைவிட்டு விரட்டு."

"ஏன்"

"ஏனு!"

"அதுக்கு மணிகட்டினது தப்பாண்டி. கேஸு வந்திருக்கு. எல்லாம் மானக்கேடு தாண்டி."

"ஐயையோ, நான் அப்பவே சொன்னேனே. நான் சொன்னு ஒருத்தரும் கேக்கறதில்லே. அதுவேண்டாம் வேண்டாம்னு அடிச்சிண்டேனே. நீங்கள் ஒருத்தரும் கேக்கலே. கேத்திக்கி அப்படித்தான் நான் உள்ளே வரச்சே குறுக்கே வந்தது. ஏதுடா சனி அபசகுனமாச் சென்னு உள்ளே போனுக்கே பாலைச் சொட்டுவிடாமே குடிச்சுட்டுப் போயிருந்தது. அதை முதல்லே வீட்டை விட்டு விரட்டுங்கோன்னு."

"அப்பா, பூனை காலுக்கு ஒரு சங்கிலி வாங்கணும். அப்பா மணி நன்னு அடிக்கிறது. காலுக்கும் சலங்கையோடே சங்கிலி போட்டா ரொம்ப நன்னுயிருக்கும்." என்றான் குழந்தை

மறுநாள் காலை ஐயர் கோர்ட்டுக்குப் போனார். அவர் அன்று பேசினது:"நான்

பூனைக்கு மணி கட்டினது தப்பென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படிக் கட்டினதினால் என்ன விபரீதம் ஆயிற்றென்று எனக்கு விளங்கவில்லை. ஆனால் அப்படி மணிகட்டியதால், நான் வாயில்லாப் பிராணிகளுக்கெல்லாம் மிகவும் ஒத்தாசை செய்திருக்கிறேன். மணியோசையைக் கேட்டு எலிகளால் ஓடிப்போக முடியும். உயிரும் பிழைக்கும். பூனையின் வாயினின்றும் அவைகளை நான்தான் தப்புவிக்கிறேன். ஒரு பூனை பிழைப்பது தேவலையா. பல உயிர்கள் பிழைப்பது உசிதமா? அவ்வெலிகளுக்கு மாத்திரம் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தால் அவைகள் எனக்கு இந்நேரம் ஒரு உபசாரப் பத்திரம் அளித்திருக்கும். நான் இப்பெரும் ஒத்தாசை செய்திருப்பதைக் குறித்து எனக்கு ஜீவரக்ஷண சபையார் ஒரு மெடல்லாவது செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்."

இதைக் கேட்டு எல்லோரும் பிரமித்தனர்.

---


மயிர் உதிர்வதை உடனே
நிறுத்தாவிட்டால் வழுக்கைத் தலைதான்



இன்றே
**கெஸ்ரின்**
வாங்கி, உங்கள் கேசத்தை அழகு
படுத்துங்கள்
ஒரு புட்டி 12 அணா
எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்
**விக்டோரியா டிபோ**
வடக்கு மாடவீதி, மைலாப்பூர்
சென்னை.



## "விவாஹம்"

---

"ஹிந்துக்களுக்கு உதவுவது. முழு விபரங்கள் கொடுத்து, விஷயங்கள் அறிந்து கொள்ளவும்."

**ராமன்** பி.எ. பி.எல்.
**ப்ராமண விவாஹ பீரோ,**
கும்பகோணம்.

# ஸினிமா வானில்—

[எஸ். எஸ்.]

பம்பாய் பிரகாஷ் பிக்சர்ஸார்கள், எஸ்.பி. எல். தனலட்சுமியை, பிரதான நடிகையாகவும், மற்றும், தமயந்தி, சாரதாம்பாள் ஆகிய உப நடிகைகளைக் கொண்டும் தமிழ்



ஸ்டன்ட் படம் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களாம். நடிக மணிகளான சீனிவாச ராவ், ஸ்ரீபதி, கொக்கோ, தேவன் முதலியவர்கள் படத்தைப் பார்ப்பவர்கள் ஸ்டன்ட் ஆகிவிடும்படி முதல் தரமாய் நடிக்கிறதாகச் செய்தியொன்று கூறுகிறது. இப்படத்திற்கு ஷாந்திபாய் ஜேதவே டைரக்டராகவும், ஸி. என். பி. ரங்கன் சங்கீத டைரக்டராகவும் இருந்து படத்தை முதல்தரமாகக் கொண்டு வருவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இப்படத்தின் பின்னணி சங்கீதத்திற்கு இத்துறையில் பெயர்போன, மதராஸ் ரெங்கா ஆர்செஸ்ட்ராவின் கோஷ்டியார் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். மதராஸ் ஹச்சின்ஸ் கிராமபோன் கம்பெனியாருடைய கிராமபோன் பிளேட்டுகளுக்கெல்லாம் புதுப்புது மெட்டில் பின்னணி சங்கீதம் அமைத்துக் கொடுத்த பெருமை இவர்களையே சாரும்.

காளமேகத்தைத் திரை உலகில் கொண்டுவந்து நிறுத்திய பிறகு, மற்றொரு படப் பிடிப்பிற்கான வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருக்கிறாராம் ஸ்ரீ. பி. எஸ். செட்டியார்; அதற்கான கதையையும் ஒருவாறு எழுதி முடித்து விட்டாராம். நக்கீரர், தேவார பாடகர் என்ற இதிகாசமே அவர் பேனாமுனையினின்றும் வெளிவரப்போகும் கலைச்சுவையாம். இதில் தேவசேனா சமேத தண்டபாணி தேசிகர் காட்சியளிப்பாரெனவும் ஸினிமா வானில் பலத்தசெய்தியொன்று உலாவுகிறது. இப்படத்தை டைரக்ட் செய்யும் பொறுப்பையும் ஸ்ரீ. செட்டியாரே ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. கூடிய சீக்கிரம் மதராஸ் ஸ்டுடியோ ஒன்றில் படப்பிடிப்பு துவக்கப்படுமென ஊகிக்கப்படுகிறது.

* * *

சென்னை அசெம்பிளி எலக்ஷனுக்கு மேம்பட்ட மாதிரியிருந்ததாம், சென்னை பிலிம் தேர்தல். மெஜாரிட்டியான வோட்



டுகள் பெற்று வெற்றி பெற்ற நடிகர், நடிகைகள், படங்கள் முதலியவற்றின், விவரம் கிழ்க்கண்டவாறு:—தமிழ்: படங்கள் திருநீலகண்டர், சாந்த சக்குபாய், ரம்பை

யின் காதல். நடிகர்கள்: எம். கே. தியாகராஜ பாகவதர், சாரங்கபாணி, பி. ஜி. வெங்கடேசன். நடிகைகள்: கே. அஸ்வத்தம்மா, டி. ஏ. மதுரம், எஸ். டி. சுப்புலக்ஷிமி. தெலுங்கு: 'படங்கள்': வந்தே மாதரம், வரவிக்ரயம், ரயத்து பிட்டா. நடிகர்கள்: நாகையா, செக்கையா, பாவாஜி பள்ளி. நடிகைகள்: காஞ்சனமாலா, புஷ்பவல்லி, சூரியகுமாரி. ஹிந்தி: படங்கள்: புகார், ஆத்மி, மதர் இந்தியா. நடிகர்கள்: சைகால், ஷோராப் மோடி, சந்திரமோகன். நடிகைகள்: கன்னன் பாலா, தேவிகாராணி, நஸீம்.

* * *

மதுரை முருகன் டாக்கி பிலிம் கம்பெனியார் அசோக்குமார் என்ற தமிழ்ப் படப்பிடிப்பின் வேலையைத் துவக்கிவிட்டார்களெனவும், டைரக்டர், ஒய். வி. ராவ், வெகு மும்மரமாய், அதிசிரத்தையுடன் கவனத்தைச் செலுத்தி வருகிறாரெனவும் தெரியவருகிறது. இப்படத்தில், எம். கே. தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன், பி. ஜி. வெங்கடேசன், குமுதினி, டி. ஏ. மதுரம் முதலிய நடிக நட்சத்திரங்கள் மிளிர்கின்றனவாம். ஒய். வி. ராவ், டைரக்டராக இருப்பதோடல்லாமல், நடிகராகவும் காட்சியளிக்கிறாராம்.

* * *

கல்கத்தாவில் மீனாட்சி கல்யாணத்தை நடத்திக்கொண்டு, பெண்ணும், மாப்பிள்ளையும், மதராஸ் வந்தடைந்திருக்கிறார்களாம். கூடிய விரைவில் சமரியா டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸார்கள் தம்பதிகளைத் தென்னிந்திய ரஸிக மஹா ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பதற்கான வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்களாம்.

---

The Book of the Hour

**'INDIA'S ROAD TO SOCIALISM'**

by

**K. Santhanam, M. L. A., (Central)**
(Member, All-India Congress Committee.)

**A great book.** **Price Re. 1.**

*To be published next week.*

Those who send Money orders and Postal orders by the 25th will get the book post-free.

**BRINDAVAN PRACHURALAYAM,**
No. 2, Brindavan Street,
MYLAPORE, MADRAS.

**BOOKS FOR ALL**

| | Rs. | A. |
|---|---|---|
| 1. The Message of the Gita Edited by Anilbaran Roy. | 5 | 0 |
| 2. Songs from the Soul By Anilbaran Roy | 1 | 4 |
| **Works of Sri Aurobindo** | | |
| 3. Essays on the Gita 1st Series | 6 | 0 |
| 4. 2nd Series | 7 | 8 |
| 5 Kalidasa | | |
| 6. A System of National Education | 1 | 0 |
| 7. The Ideal of the Karmayogin | 1 | 8 |
| 8. The Renaissance in India | 1 | 4 |
| 9. The Life Divine (Just published Vol. I) | 6 | 0 |

**Svetaranya Ashrama,**
7, North Mada Street, Mylapore.